# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**முனைவர். ப. ராஜ்குமார், MA.,LLB.,Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி,
மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை
அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**ந.க.எண் : 4061/2016 / எம்சி. 8 நாள் : 17.06.2016**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் **24.06.2016 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/** உண்மை நகல் **/**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுன் 2016

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள் |
| 1 | பொதுப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. மீனாலோகு, 49-வது வார்டு மாமன்ற உறுப்பினர் - திரு. கே. அர்ச்சுனன் , பணிகள் குழு தலைவர், 85–வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் திரு. வி. இராமமூர்த்தி, 42-வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆகியோர் மாமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து கடிதம் கொடுக்கப்பட்டது- ஏற்கப்பட்டது – மாமன்றத்திற்கு தகவல் தெரிவித்தல் மற்றும் பதிவு செய்தல் - தொடர்பாக. |
| 2 | பொதுப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 3 | JNnurm – பில்லூர் 2-வது குடிநீர் திட்டம் - பில்லூர் அணையில் நீரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை இயக்கும் பணிக்கு ஒப்பந்ததாரரை நியமித்தல் -தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் – முன்னனேற்பு வழங்கப்பட்டது - மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் திருமதி. சித்ரா / அய்யப்பன் வார்டு எண். 22 துப்புரவு பணியாளர் திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சிக்கு பணியிடம் மாறுதல் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி - துப்புரவு பணியாளர்களுக்கு 2016-17ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | பொது சுகாதாரப் பிரிவு -விலங்குகள் பாதுகாப்பு மையம் மற்றும் தெருநாய்களுக்கு காப்பகம் அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 7 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – வீடற்றோர் தங்கும் விடுதி புதிதாக ஆரம்பித்தல் – மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8 | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் டிரக் டொர்மினல் அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்கள் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 9 | கல்விப் பிரிவு - மாநகராட்சி ஐந்து பள்ளிகளில் கண்காணிப்புக் கேமரா (CCTV) பொருத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| | |
| **12** | நகரமைப்புப் பிரிவு - நில உரிமை மாற்றம் – கிருஷ்ணராயபுரம் கிராமம், சர்வே வார்டு J (10), பிளாக்-10, டி.எஸ்.நம்.5035 பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 70 சென்ட் இடத்தினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பாப்பநாயக்கன்பாளையம் துணை மின் நிலையம் அமைக்க நிலமதிப்பின் அடிப்படையில் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது – 24 அடி அணுகு சாலை ஒதுக்கீடு செய்து மீதமுள்ள இடத்தினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| **13** | பொறியியல் பிரிவு - 6 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் TUFIDCO நிறுவனத்திடம் நிபந்தனைகளின் பேரின் கடன் ரூ. 3966 லட்சம் பெற்று சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **15** | பொறியியல் பிரிவு – மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க TUFIDCO நிறுவனத்தின் மூலம் ரூ.44.07 கோடி கடன் உதவியில் இரண்டாம் கட்டமாக 1 சிப்பத்திற்கான ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **16** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்காக சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் சீரமைப்பு செய்தல் - 11 சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - 6 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **21** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – துப்புரவு ஆய்வாளர் பயிற்சி முடித்த துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் களப்பணி உதவியாளர் – நகராட்சிப் பணிகளில் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்குதல் - நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **22** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. பி. செல்வகுமார், பதிவுரு எழுத்தர், மத்திய மண்டலம் – இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவி உயர்விற்கு விதி தளர்வு செய்து வழங்குதல் - நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **23** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 41 – சத்தி பிரதான சாலை டெக்ஸ்ட்டுல் பாலம் முதல் சிவசக்தி காலனி சந்திப்பு வரை சென்டர் மீடியன் தெருவிளக்கு கம்பங்கள் அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **24** | பொது சுகாதாரம் - மாநகராட்சி அனைத்து பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு மஸ்தூர்கள் - ஒப்பந்ததாரர் மூலம் - நியமனம் செய்தல் - ஒப்பந்தபுள்ளி கோரி பணியாட்களை நியமனம் செய்யும் வரை ஏற்கெனவே உள்ள ஒப்பந்ததாரர் மூலம் பணியாட்களை நியமனம் செய்தது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| **25** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – காந்திபுரம் சத்தி சாலையில் உயர்மட்ட மேம்பாலம் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருதல் – இரண்டாம் அடுக்கு மேம்பால பணிகளை மேற்கொள்ளுதல் – ஆவாரம்பாளையம் சாலை சந்திப்பை கடந்து நீட்டிப்பு செய்ய நெடுஞ்சாலைத்துறையை கேட்டுக் கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **26** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – காந்திபுரம் சத்தி சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருதல் – 100 அடி சாலையில் 700மீ மற்றும் சின்னச்சாமி சாலையில் 1330மீ S.R.S.Travels வரை தற்காலிகமாக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **27** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – காந்திபுரம் சத்தி சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருதல் – 100அடி சாலை மற்றும் சின்னச்சாமி சாலையில் 110கி.வா உயர் அழுத்த மின்கம்பிகளை நிலத்தின் கீழ் புதைத்து மாற்றியமைக்கும் பணிக்காக மின்கோபுரம் அமைக்க சின்னசாமி சாலையில் S.R.S.Travels அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பிளாக் எண். J53 நகர சர்வே எண்.597 இடத்தினை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்குதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **28** | JNnurm – பாதாள சாக்கடை திட்டப்பணி – சிப்பம் II - நல்லாம்பாளையம் (CBE-KAY) பகுதியில் TRENCHLESS TECHNOLOGY முறையில் கி.மீ 3 / 200–300 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **29** | JNnurm – பாதாள சாக்கடை திட்டப்பணி – சிப்பம் III - இருகூர்-பீளமேடு, நெசவாளர் காலனி பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் கி.மீ 477/800-900 குறுக்கே Trenchless Technology முறையில் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் encasing குழாய் பதிக்கும் பணி -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **30** | JNnurm – பாதாள சாக்கடை திட்டப்பணி – சிப்பம் III - இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 9/500-800 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் 50 மீட்டர் நீளத்திற்கு 24mm thickness அளவுள்ள 800mm dia MS service pipe பதிக்கும் பணி -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **31** | JNnurm – பாதாள சாக்கடை திட்டப்பணி – சிப்பம் III - இருகூர்-போத்தனூர் பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 477/800-900 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் (service pipe) குழாய் பதிக்கும் பணி -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **32** | JNnurm – பாதாள சாக்கடை திட்டப்பணி – சிப்பம் III - இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 7/400-500 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் (encasing pipe) பதிக்கும் பணி -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 33 | JNnurm – பாதாள சாக்கடை திட்டப்பணி – சிப்பம் III - இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 9/500-600 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 34 | JNnurm –பில்லூர் இரண்டாவது தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள இரண்டு மோட்டார்களில் ஏற்பட்டுள்ள நீர் கசிவுகள் மற்றும் ஆயில் கசிவுகளை பழுது நீக்கம் செய்து பொருத்தும் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 35 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2016 முதல் 31.03.2017 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் –செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 36 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிஙகன் ஆம்நெக்கார் நகரத்திற்கு இரு நகரஙகளுக்கிடையே உறவை மேம்படுத்துதல் நோக்கிலான ஆலோசனை தொடர்பான சிறப்புக் கூட்டத்திற்கு 28.06.16 முதல் 04.07.2016 வரை கலந்து கொள்ள அனுமதி வேண்டுதல் - இரு நாடுகளுக்கிடையே சென்று வர ஏற்படும் செலவீன தொகையை மாநகராட்சி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 37 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் – திருப்பூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து எரிபொருள் எண்ணை/ திரவ ஹைட்ரோகார்பன் எரிபொருள்/கச்சா எண்ணை தயாரிக்கும் ஆலையினை டர்ன்கீ முறையில் நிறுவி அதனை 5 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிக்கும் (Setting up of Plastic Wastes to Fuel Oil/Liquid Hydro Carbon Fuel Production Plant at Vellalore on Turn Key Basis including Operation & Maintenance for 5 Years) திட்டப்பணியினை செயல்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 39 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக்கிடஙகிலுள்ள காலியிடத்தில் கொட்டப்பட்டு வரும் குப்பைகளின் மேல் நுண்ணுயிர் நாசினி கலவை மற்றும் மூலிகை மருந்து ஆகியவற்றினை தெளிக்கும் பணியினை மேற்கொள்வதற்கும் குப்பைகளில் ஏற்படும் தீயினை தண்ணீர் பீய்ச்சி அணைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தேவைப்படும் நவீன வகை நீர் பீய்ச்சி வாகனம் ஒன்று ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - |
| 40 | பொறியியல் பிரிவு - தனியார் நிறுவனத்தினரால் நிறுவப்பெற்றுள்ள குப்பை மாற்று நிலையங்கள், வெள்ளலூர் பகுதியில் தனியார் நிறுவனத்தினரால் நிறுவப்பெற்றுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் சேனிடரி லேண்ட்ஃபில் கட்டமைப்பு ஆகியவற்றின் அன்றாட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மாநகராட்சி பிரதான அலுவலகத்திலிருந்து கண்காணிப்பதற்கும் வெளியாட்கள் வளாகங்களுக்குள் அத்துமீறி நுழைவதனை கண்காணிப்பதற்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.53.00 இலட்சம் -மாமன்ற அனுமதி கோருதல் - |
| 41 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையினை மூன்றாண்டுகள் இயக்கி பராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் மாமன்ற அனுமதி கோருதல் - |

| | |
|---|---|
| **42** | பொறியியல் பிரிவு - வார்டு எண் **87** க்குட்பட்ட மகாராஜா காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல்– ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் மாமன்ற அனுமதி கோருதல் - |
| **43** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 47 – மீனாட்சி நகர் மற்றும் PNT காலனி மகாராஜா காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் மாமன்ற அனுமதி கோருதல் - |
| **44** | பொது சுகாதாரப் பிரிவு - அனைத்து நகர்நல மையங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் நியமனம் செய்தல் - புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு காலநீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **45** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பிரதான அலுவலகம் – திரு.ந. வீரக்குமார், உதவியாளர், பொதுப்பிரிவு – தனது பெயரிலுள்ள இடத்தில் இந்தியன் வங்கி, சி.எம்.சி கிளையில் ரூ.**10.00** இலட்சம் வீடு கட்டுவதற்காக கடனாக பெற்ற தொகையில் தற்போது நிலுவையிலுள்ள ரூ.**8,63,000/–**ஐ மாநகராட்சி வீடுகட்டும் முன்பணத் தொகை கோருதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **46** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பிரதான அலுவலகம் – திரு.வே. இராமச்சந்திரன், உதவியாளர், குடிநீர் விநியோகப்பிரிவு – அவரது பெயரில் காலி மனையிடம் வாங்கி வீடு கட்டி கொள்ள முன்பணம் அனுமதித்தல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **47** | கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திரு. ம. மணிகண்டன், தேர்ச்சி திறனற்ற பணியாளர் - புதிய வீடு வங்கி கடன் பெற்று கட்டியது – வீடு வாங்குவதற்காக வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன்தொகையை அடைப்பதற்கு மாநகராட்சி வீடு கட்டும் முன்பணம் நிதியில் இருந்து கடன் பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **48** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மாதந்திர வணிக வளாகங்கள் 2015-18-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.07.2015-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **49** | நகரமைப்புப் பிரிவு - நிலம் – நீண்ட கால குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் வடக்கு வட்டம் – சின்னவேடம்பட்டி கிராமம் – க.ச.எண்.**268/1** – மரபணு பரிசோதனை ஆலோசனை பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் – நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலம் வழங்குதல் - மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை தெரிவித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **50** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வாலாங்குளத்தில் குடியிருந்த 792 குடியிருப்புதாரர்களுக்கு வார்டு எண் 70 அம்மன்குளம் பகுதியில் ஒதுக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்வதற்கு மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

குறள் - 666

## விளக்கம்

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்பு தீர்மானம் -1

"நடைபெற்று முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி தொடர்ந்திட வேண்டும் என்ற வேண்டுகோளோடு எந்த கட்சியின் கூட்டணியும் இல்லாமல் யாரோடும் துணை சேராமல் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் ஒரே சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தினார்.

" தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும் " என்ற வார்த்தையை மெய்ப்பித்து தனிப்பெரும்பான்மையோடு 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்ட இயக்கமே மீண்டும் ஆள்கிற நிலையை தந்திருக்கிற தமிழக மக்களுக்கு வாழ்நாள் உள்ள வரை நன்றி தெரிவிப்பதாக மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை மீட்டெடுக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் 5 ஆண்டு காலம் வாழ்ந்த தவ வாழ்வு வென்றுள்ளது. நடக்கின்ற ஆட்சி நல்லாட்சி என்பதற்கு அத்தாட்சி பத்திரம் வழங்கிய தமிழக மக்களுக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவிப்பதோடு புதிய வரலாற்றை தமிழகத்தில் உருவாக்கியுள்ள சாதனை சரித்திரத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கொங்கு மண்டல மக்களுக்கும் இம்மாமன்றம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது" என்ற சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

### சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 24.06.2016

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

### சிறப்புத் தீர்மானம் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.கோவிந்தராஜ் என்பவரது பெயரை மாநகராட்சியின் கருப்புப் பட்டியலில் சேர்த்திருந்தாலும், அவர் எடுத்துள்ள பணிகளை வேறு ஒப்பந்ததாரரை நியமித்து மேற்கொள்ள மிகுந்த காலதாமதம் ஆகும் எனபதால் திரு. கோவிந்தராஜ் ஒப்பந்ததாரரே அப்பணிகளை செய்து முடிக்க அனுமதிக்கும் உத்தரவை மாநகராட்சி நிர்வாகம் பிறப்பிக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

### சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 24.06.2016

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

### சிறப்புத் தீர்மானம் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் சமீபகாலமாக குடிநீர் விநியோகம் செய்வதில் மிகுந்த குழப்பம் நிலவி வரும் நிலையில், பொதுமக்கள் மத்தியில் மாநகராட்சிக்கும், தமிழக அரசுக்கும் மிகுந்த அவப்பெயர் ஏற்படும் சூழல் உள்ளதால், குடிநீர் விநியோகத்தை திறம்பட கையாளும் நோக்கத்திற்காக, மண்டல வாரியாக ஒரு அதிகாரியை நியமிப்பதா இல்லை வேறு ஏதாவது ஒரு சிறந்த வழி இருக்கிறதா என்று பட்டியலிட்டு, மாநகர பொறியாளர் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், ஆணையாளருக்கும் நாளைக்கு காலையில் கொடுக்க வேண்டும். இது மன்றத்தின் சார்பாக பணியமர்த்தப்படும் என்ற சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

### சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 24.06.2016

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. மீனாலோகு, 49-வது வார்டு மாமன்ற உறுப்பினர் - திரு. கே. அர்ச்சுனன், பணிகள் குழு தலைவர், 85–வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் திரு. வி. இராமமூர்த்தி, 42-வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆகியோர் மாமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து கடிதம் கொடுக்கப்பட்டது- தொடர்பாக. |
| பார்வை | 1) திருமதி மீனாலோகு, 49-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் நாள் 18.04.2016<br>2) திரு. கே. அர்ச்சுனன், 85-வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் பணிகள் குழு தலைவர் அவர்களின் கடிதம் நாள் 18.04.2016<br>3) திரு. வி. இராமமூர்த்தி, 42-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் 22.04.2016<br>4) கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 37<br>5) மாண்புமிகு மேயர் அவர்களின் குறிப்பு 18.04.2016 மற்றும் 22.04.2016 |

----------------------

பார்வை 1 முதல் 3 வரையுள்ள கடிதங்களில், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி மீனாலோகு, 49-வது வார்டு, திரு. கே. அர்ச்சுனன், பணிகள் குழு தலைவர், 85-வது வார்டு மற்றும் திரு. வி. இராமமூர்த்தி, 42-வது வார்டு ஆகியோர் தங்களது மாமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்வதாக தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளனர்.

பார்வை 4-ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981- ன் பிரிவு 37-ல், மாமன்ற உறுப்பினரால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான ராஜினாமா அறிவிப்பு, மாண்புமிகு மேயர் அவர்களால் பெறப்பட்ட தேதியிலிருந்து மாமன்ற உறுப்பினர் பதவி விலகியதாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் மாமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா கடிதம் பார்வை 5-ல் காணும் குறிப்பின்படி, மாண்புமிகு மேயர் அவர்களால் ஏற்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று மாமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா குறித்த விபரங்கள் மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம் ந.க.எண் 10766/11/எம்.சி. 8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 24.06.2016</u>**

பதிவு செய்யப்பட்டது.

---

**பொருள் எண் 2**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை - அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி அலுவலக கடித எண் 7316 நாள் 24.02.2016

-------------

கோயம்புத்தூர் மாநகர மன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், அகில இந்திய மேயர்கள் மன்றம், புதுடெல்லியில் அங்கத்தினராக இருந்து வருகிறார். இதற்கு ஆண்டு சந்தா ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் நடப்பாண்டு மற்றும் முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.60,000/- செலுத்துமாறு பார்வையில் காணும் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகர மன்றத்தின் சார்பாக நடப்பாண்டு மற்றும் முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்)–ஐ அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 2502/16/ எம்.சி. 8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. **159.85** கோடி செலவில் அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பில்லூர் அணையில் உள்ள நீர் சேகரிப்பு கிணறு மற்றும் மோட்டார் அறையில் மோட்டார்கள், இயக்கும் பணி தி/ள். மெகா இன்ஜினியரிங் அண்டு இன்ப்ராஸ்டெக்சர்ஸ் லிட்., ஹைதராபாத் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, பணி செய்து முடிக்கப்பட்டது. மேலும் ஒப்பந்த நிபந்தனைப்படி மோட்டார் பம்புசெட்டுகள், டிரான்ஸ்பார்மர் மற்றும் இதர பணிகளின் ஒரு வருட பராமரிப்பு காலம் **31.07.2015** உடன் முடிவடைகிறது.

எனவே, பில்லூர் அணையில் குடிநீர் இரண்டாவது திட்ட தலைமை நீரேற்று நிலையத்தை ஒரு வருட காலம் (மோட்டார்கள், டிரான்ஸ்பார்மர்கள், மின் இயந்திரங்களை இயக்கவும், குடிநீர் தலைமை நிலையத்தை பராமரிக்கும் பணி) இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ **49.95** லட்சத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. **49.95** லட்சத்திற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் அனுமதி பெறப்பட்டது. முதல் ஒப்பந்த அழைப்பான **07.08.2015**–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்திடம் விலைகுறைப்பு கோரியதில் மேற்படி நிறுவனம் விலைக்குறைப்பு செய்து வழங்கியுள்ளது. மேற்படி நிறுவனம் கொடுத்த விலைக்குறைப்பு விபரம் பின்வருமாறு,

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள் ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| **1** | பில்லூர் அணையில் நீரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை இயக்கும் பணி | ரூ. **4764120** | திரு. K.P.செங்கோடன் | ரூ. **5219500** | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு **9.56** % அதிகம் |
| | | | தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை | ரூ. **4996860** | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு **4.89** % அதிகம் |
| | | | | ரூ. **4993860** | விலை குறைப்புக்குப் பின்னர்ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு **4.82** % அதிகம் |

அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதிக்கு முன்னேற்பு வழங்கியதற்கும், விலைகுறைப்பிற்குப் பின்னர் ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு **4.82** % அதிகமாக பெறப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு முன்னேற்பு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : பில்லூர் அணையில் நீரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை இயக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. **49.95** லட்சத்திற்கு அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதிக்கு முன்னேற்பு வழங்கியதற்கும், மேற்படி பணிக்கு முதல் ஒப்பந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைகுறைப்பிற்கு பின்னர் மதிப்பீடு விலை விகிதத்திற்கு **4.82** சதவீதம் அதிகம் கொடுத்த குறைந்த விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க முன்னேற்பு வழங்கியதற்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். **7214/15/ஜே.என்5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 24.06.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

பொருள் : பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் திருமதி. சித்ரா / அய்யப்பன் வார்டு எண். 22 துப்புரவு பணியாளர் திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சிக்கு பணியிடம் மாறுதல் - அனுமதித்தல் - தொடர்பாக.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் வார்டு எண். 22-ல் துப்புரவு பணியாளராக பணியாற்றும் திருமதி. சித்ரா / அய்யப்பன் என்பவரது மூன்று பெண் குழந்தைகளும் பழனியில் அவரது வயதான பெற்றோர்களின் பராமரிப்பில் படித்து வருவதாகவும், உறவினர்கள் மூலம் குழந்தைகளுக்கு தொந்தரவு ஏற்பட்டு வருவதாலும், அதன் அடிப்படையில் குழந்தைகளை பாதுகாத்திட வேண்டி அவருக்கு பழனி நகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

மாமன்ற அனுமதிக்கு பின் ஆணையாளர், பழனி நகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 1065 / 2014 / இ2 (மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரம் - துப்புரவு பணியாளர்களுக்கு 2016-17ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்குதல் - தொடர்பாக.

--------

அரசாணை எண் (2டி) எண் 37 நாள் 14.05.1999 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை உத்தரவுப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவுபணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண்துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், ஒரு ஜோடி காலணியும், ஒரு தலைப்பாகையும், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு பாலிஸ்டர் புடவையும், இரண்டு ஜாக்கெட்டுகளும், 1 ஜோடி காலணியும் மற்றும் ஒரு தலைப்பாகை துணியும் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஜோடி சீருடை தீபாவளிப்பண்டிகைக்கும் மற்றொரு ஜோடி சீருடை பொங்கல் பண்டிகையின் போதும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (வாலாயம்) எண் 393 நாள் 16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.2) உத்தரவுப்படி, மலேரியா ஒழிப்புத்திட்ட பணியாளர்களுக்கு 2 ஜோடி முழுக்கால் சட்டை, 2 ஜோடி அரைக்கை சட்டை, காலணி ஆகியன வழங்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன் படி அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் முழுக்கால் சட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 50 கைத்தறி, காதி (டி4) டிபார்ட்மெண்ட் நாள் 10.03.1995ன்படி அரசுத்துறை நிறுவனங்களான கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், தேசிய பஞ்சாலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இவ்வகை சீருடைகள் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அரசாணையின்படி ஆண்துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ.100/-, பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 20-ம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன்படி ஆண் பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ. 200-ம் மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 40-ம் வழங்க தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுகாதாரநிலைக்குழு தீர்மான எண் 33 நாள் 10.10.2013-ன்படி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.450/- மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.100/-ம் வழங்கப்பட்டுவருகிறது.

சென்ற 2015-16-ம் ஆண்டு தையற்கூலி செலவினம் ரூ.17,86,000/-யும், சீருடைகள் வாங்கி வழங்க ரூ.26,17,168/-யும் மற்றும் காலணிகளுக்கு ரூ.5,22,276/-யும் ஆகமொத்தம் ரூ.49,25,444/- செலவாகியுள்ளது.

இவ்வாண்டு சீருடைகள் வாங்குவதற்கு ரூ. 62.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து மண்டல துப்புரவு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மொத்தம் 2740 நபர்களுக்கு 2016-17-ம் ஆண்டிற்கு 2 ஜோடி சீருடைகள், (தையற்கூலி) மற்றும் காலணிகள் ஆகியன அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து ரூ. 62.00 இலட்சத்திற்கு வாங்கி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 4233 /2016/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 24.06.2016</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

| | |
|---|---|
| பொருள் :- | கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப் பிரிவு -விலங்குகள் பாதுகாப்பு மையம் மற்றும் தெருநாய்களுக்கு காப்பகம் அமைக்க பயன்பாட்டு குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்டம் 2016-17ஆம் நிதியாண்டில் ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது – அனுமதி உத்தரவு வேண்டுதல் - தொடர்பாக. |
| பார்வை :- | 1. கோயம்புத்தூர் மாநகராட்சி 2016-17ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கை பக்கம் எண். 23 மற்றும் 24<br>2. மாண்புமிகு மேயர் அவர்களின் ஆய்வு குறிப்பு உத்தரவு |

********

பார்வையில் கண்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி 2016-17ம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கை மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் உத்தரவு ஆகியவற்றின்படி, கோவை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள தெருநாய்களுக்கு ஏற்கனவே சீரநாயக்கன்பாளையம் மற்றும் உக்கடம் பகுதிகளில் அறுவை சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் போதுமான வசதியும் இடமும் இல்லாததால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே, நோய்வாய்ப்பட்ட நாய்கள், கடிக்கும் நாய்கள் மற்றும் கர்ப்பிணி நாய்கள் ஆகியவற்றை தனித்தனியாக பராமரிப்பு செய்யும் பொருட்டு, வெறி நாய்களுக்கான கூடாரம், மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதியுடன் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூரில் உள்ள 2 ஏக்கர் பரப்பளவில் தெருநாய்களுக்கான காப்பகம் மற்றும் விலங்குகள் பாதுகாப்பு மையம் அமைக்கவும், இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் இடத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு தெருநாய்கள் காப்பகம் மற்றும் விலங்குகள் பாதுகாப்பு மையம் அமைக்கலாம்.

1) மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் குப்பைக் கிடங்கு வளாகத்தில் 2 ஏக்கர் நிலத்தில் மின்சார வசதி, தண்ணீர் வசதி மற்றும் இடத்தை சுற்றியும் வேலி அமைத்தல்.
2) தெருநாய்களுக்காக கட்டப்படும் காப்பகத்தின் சுற்றுச்சுவர் 6 அடி உயரம் உள்ளதாக இருக்க வேண்டும்.
3) காவலர் மற்றும் ஊழியர்கள் தங்கும் அறை அளவு 11 X 16 ஆக இருக்க வேண்டும்.
4) அறுவை சிகிச்சை மையம் அறை அளவு 30 X 16ம் மற்றும் அறை வாஸ்பேசன் வசதியுடன் இருக்க வேண்டும்.
5) மருத்துவர் அறை, மருந்துகள் பாதுகாப்பு அறை, மருத்துவர்களுக்கு தனியாக கழிவறை மற்றும் இதர மருத்துவர்களுக்கு ,ஊழியர்கள், பார்வையாளர்களுக்கு என தனித்தனியாக கழிவறை மற்றும் குளியல் அறை அமைக்கப்பட வேண்டும்.
6) ஊழியர்கள் சமையல் அறை சமையல் கேஸ் அடுப்பு பயன்படுத்தும் அறை அளவு 11 X 16 இருக்க வேண்டும்.
7) கழிவுநீர் சுத்திகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.
8) தெருக்களில் சுற்றிதிரியும் தெருநாய்களை பிடித்து வந்து அறுவை சிகிச்சைக்கு முன் அடைத்து வைக்க நான்கு அறைகள் அறை அளவு 11 X 11 ஆக இருக்க வேணடும்.
9) தெருநாய்களை ஓய்வுக்காக திறந்துவிட திறந்தவெளி இடம் வேண்டும்.
10) தெருநாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்த பின் அவைகளை வைக்கும் அறைகள் எண்ணிக்கை 4, ஒரு அறையின் அளவு 11 X 11 ஆக இருக்க வேண்டும்.
11) தெருநாய்கள் மற்றும் விலங்குகளுக்கு விறகு கட்டைகள் அடுப்பு எரிக்கும் வசதியுடன் கூடிய சமையல் அறை வேண்டும்.
12) துணிகள் துவைக்கும் இடம் வேண்டும்.
13) தெருநாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்தபின் தெருநாய்கள் எங்கு பிடித்தம் செய்யப்பட்டதோ அங்கு கொண்டு செய்து விட தெருநாய்கள் பிரித்து வைக்கும் அறைகள் எண்ணிக்கை 4 . ஒரு அறையின் அளவு 11X 11.
14) வெறிபிடித்த நாய்கள் வைக்கும் அறை எண்ணிக்கை 1 அறையின் அளவு 11 X 11
15) அறுவை சிகிச்சை கழிவுகள் மற்றும் குப்பை கழிவுகள் சேரிக்கும் இடம் அமைக்கப்பட வேண்டும்.
16) கர்ப்பிணி நாய்கள் நோய்வாய்ப்பட்ட விலங்குகள் போன்றவற்றை கொண்டு வந்து அடைப்பதற்கு 50 சென்ட் திறந்த வெளி இடம் அமைக்கப்பட வேண்டும்

எனவே, மேற்காண் தெருநாய்கள் மற்றும் விலங்குகள் பாதுகாப்பு மையம் கட்டுவதற்கு உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்கள் DPR தயார் செய்து அறிக்கை சமர்ப்பித்த உடன் தெருநாய்களுக்கான காப்பகம் கட்டுவதற்காக இந்நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.50 இலட்சத்தில் கட்டிகொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள பொறியில் பிரிவிற்கு கோப்பு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்.1515/2015/ எம்.இ.2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 24.06.2016

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – வீடற்றோர் தங்கும் விடுதி புதிதாக ஆரம்பித்தல் – மனநல காப்பகம் – மாமன்ற அனுமதி பெறுதல் - நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக.

பார்வை :- 1. கூடுதல் நகராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் நேர்முக கடிதம் நாள் 21.11.2014.
2. கோயம்புத்தூர் மாநகராட்சி 2016 – 2017 ம் நிதியாண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை பக்கம் 22.

******

பார்வை 1 ல் காணும் கூடுதல் நகராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் நேர்முக கடிதத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி வீடற்றோர் தங்கும் விடுதி அமைக்க இடங்களை தேர்வு செய்யவும், ஒரு லட்சம் மக்கள் தொகை உள்ள இடத்திற்கு ஒரு தங்கும் விடுதி என ஐந்து தங்கும் விடுதி அமைக்கவும், அதற்கான DPR தயார் செய்து தகுந்த வழிகாட்டுதல் மற்றும் இதற்கான இடம் கண்டறிந்து வீடற்றோர் தங்கும் விடுதி கட்டுவதற்கு அறிக்கை அளிக்குமாறு தெரிவித்துள்ளார்.

பார்வை 2 ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி 2016 – 2017 ம் ஆண்டு வரவு – செலவு திட்டம் அறிக்கையில் கோவை மாநகராட்சி பகுதிகளில் மனநலம் குன்றிய எவ்வித பராமரிப்பும் இல்லாமல் வாழ்ந்து வரும் மக்களை சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு மாநகராட்சிக்கு சொந்தமான தகுதியான இடத்தில் 100 நபர்கள் தங்கி சிகிச்சை பெறும் வகையில் அனைத்து வசதிகளுடன் காப்பகம் அமைக்கவும் , பயனாளிகளுக்கான உணவு மற்றும் காப்பகத்திற்கு உரிமம் பெறுவதற்காக சம்மந்தப்பட்ட அரசு துறைகளிடமிருந்து சான்றிதழ்கள் மற்றும் அனுமதி பெறுவதற்கான கட்டணங்கள் காப்பகத்திற்கு தேவையான மனநல மருவத்துவர்கள் மற்றும் இத்துறை தொடர்பான பயனாளிகளை நியமித்தல் மற்றும் இக்காப்பகத்திற்கென அனைத்து வசதிகளுடன் கூடிய அவசர ஊர்தி ஒன்றை கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.134.00 இலட்சங்கள் இந்நிதியாண்டில் (2016 – 2017) ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் புதிதாக ஐந்து வீடற்றோர் தங்கும் விடுதிகள் மற்றும் ஒரு மனநல காப்பகம் ஆகியவற்றை அமைக்க இடங்களை தேர்வு செய்து DPR தயார் செய்து செயற்பொறியாளர் (திட்டம்) பிரிவிற்கு கோப்புகள் அனுப்பி வைக்கவும் மேலும், மாமன்றத்தில் அனுமதி பெறப்பட்ட உடன் மேற்காண், வீடற்றோர் தங்கும் விடுதி மற்றும் மனநல காப்பகம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள பொறியியல் பிரிவிற்கு கோப்பு அனுப்பி வைக்கவும், மேலும் ஐந்து வீடற்றோர் தங்கும் விடுதிக்கான செலவினங்கள் NULM (SSUH) நிதியிலிருந்து செலவு செய்யவும் மற்றும் ஒரு மனநல காப்பகம் அமைப்பதற்கு பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், மாமன்றத்தில் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-அனுமதிக்கலாம் ந.க.எண்10964/2013/எம்இ6

## மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 24.06.2016

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளலூர் பகுதியில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் டிரக் டெர்மினல் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

1.தி/ள் மகிந்திரா கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் ,சென்னை
2. தி/ள்.வெல்சிட்டி கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் (பி).லிட்

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் தொழில்நுட்ப தகுதியில் தேர்வு பெற்றுள்ள தி/ள்.மகிந்திரா கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை திறக்க ஆணையர் ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து 02.11.2015 ல் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| நிறுவனத்தாரின் பெயர் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி |
|---|---|
| தி/ள்.மகிந்திரா கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் சென்னை | ரூ.37,00,000/-(+)<br>சேவை வரி |

மேற்கண்ட, தி/ள். மகிந்திரா கன்ஸல்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ37,00,000/.(+) சேவை வரியினை குறைத்துக்கொடுக்க கோரவும் திறனாய்வுக்குழுவின் பரிந்துரையை ஆணையர் 12.11.2015 ம் தேதியில் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தி/ள்.மகிந்திரா கன்ஸல்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு விலைக்குறைப்பு செய்ய கடிதம் அனுப்பியதில் கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்.

| | |
|---|---|
| தி/ள்.மகிந்திரா கன்ஸல்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை | ரூ.35,89,000/- (+)<br>சேவை வரி |

மேற்படி தி/ள்.மகிந்திரா கன்ஸல்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை நிறுவனத்தார் குறிப்பிட்டுள்ள தொகை கூடுதலாக உள்ளதால் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய கடிதம் அனுப்பியதில் கீழ் கண்டவாறு விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்.

| | |
|---|---|
| தி/ள்.மகிந்திரா கன்ஸல்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை | ரூ.35,15,000/- (+)<br>சேவை வரி |

எனவே திறனாய்வுக்குழுவின் ஒப்புதலின்படி தி/ள் மகிந்திரா கன்ஸல்டிங் இன்ஜினியர்ஸ், சென்னை நிறுவனத்தாரின் ரூ.35,15,000/.(+) சேவைவரியுடன் (விலைக்குறைப்பிற்குப் பின்) சேர்த்து வழங்கக்கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், இப்பணியின்அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கிய முன்அனுமதிக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.6490/2015/.எம்.டி4 அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம்

**மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

பொருள்- நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளில் கண்காணிப்புக் கேமரா (CCTV ) பொருத்துதல் - மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைத்தல் - சார்பு.

பார்வை- மாண்புமிகு மேயர் அவர்களின் ஆய்வுக்குறிப்பு நாள் 13.06.2016

----

மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் 16 மேல்நிலைப்பள்ளிகள், 10 உயர்நிலைப்பள்ளிகள், 15 நடுநிலைப்பள்ளிகள், 41 ஆரம்பப்பள்ளிகள் மற்றும் ஒரு சிறப்புப் பள்ளி என மொத்தம் 83 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. மாணவ / மாணவியர் மற்றும் பள்ளியின் நலன் கருதியும் அனைத்துப் பள்ளிகளிலும் கண்காணிப்புக் கேமரா (CCTV) பொருத்த மாண்புமிக மேயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மேல்நிலைப்பள்ளிகளில் பெண்கள் பயிலும் கீழ்காண் பள்ளிகளில் கண்காணிப்புக் கேமரா பொருத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி , இர.ச.புரம் (மேற்கு).
2. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி , ஒப்பணக்காரவீதி.
3. மாநகராட்சி எஸ்.ஆர்.பி.அம்மணியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி , இர.ச.புரம்.
4. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி , அரங்கநாதபுரம்.
5. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி , இராமகிருஷ்ணாபுரம்.

எனவே மேற்காண் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கண்காணிப்புக் கேமரா (CCTV ) பொருத்த அனுமதி வேண்டி மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண்.4667/2016/கே-12

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 24.06.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11783/ 2015/ எம்.டி.5 | வார்டு எண் 50 –க்கு உட்பட்ட சிவானந்தா காலனி ராஜு நாயுடு சாலையில் உள்ள மேல்நிலைத் நீர்தேக்க தொட்டிக்கு மேம்பாட்டு பணிகள் செய்தல். | 29.70 | 09.02.16 முதலாம் அழைப்பு | 1.திருமதி. கே.பங்கஜம் 0.84% குறைவு 2. தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் 2.36% அதிகம் | திருமதி.கே. பஙகஜம் 0.84% குறைவு |
| 2 | 11079/ 2015/ எம்.டி.5 | வார்டு எண் 73–க்கு உட்பட்ட ஸ்டேட் பேங்க் சாலைக்கு மேற்புறத்தில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் | 69.00 | 12.02.16 இரண்டாம் அழைப்பு | தி/ள்.என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் 10.93 % அதிகம் | தி/ள்.என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் 4.99 % அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 3 | 11280/ 2015/ எம்.டி.5 | வார்டு எண் 48 & 49–க்கு உட்பட்ட சங்கனுர் ரோட்டில் அமைந்துள்ள அமரர் ஜீவானந்தம் வீதியில் குடிநீர் குழாய் விநியோகம் மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல் | 23.40 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் 1.13 % அதிகம் 2). திரு. ஆர். உமாபதி 0.09% குறைவு | திரு.ஆர். உமாபதி 0.09% குறைவு |

மேற்கண்ட பணிகளின் அவசரம் அவசியம் கருதி வரிசை எண் 2–ல் மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கிய முன் அனுமதிக்கு பின்னேற்பும், வரிசை எண் 1 மற்றும் 3–ல் பணிக்குழு தலைவர் அவர்கள் வழங்கிய முன் அனுமதிக்கு பின்னேற்பும், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம். ந.க.எண்.11783/2015/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1116/ 2015 / எம்.டி2 | வார்டு எண்.46க்கு உட்பட்ட கணபதி கஸ்தூரிபாய் பிரதான சாலைக்கு தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 65.00 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் 4.80% அதிகம் 2). திருமதி. கே.பங்கஜம் 9.42 % அதிகம் | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் 0.12% குறைவு (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 2 | 3736/ 2015/ எம்.டி2 | வார்டு எண்.46க்கு உட்பட்ட பூந்தோட்டம் பகுதியில்1,2,3 மற்றும் குறுக்கு சாலைகளில் பழுதடைந்த மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல். | 52.00 | 03.03.16 இரண்டாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் 0.19% குறைவு | தி/ள். என்.பி.கே. அசோஸியேட்ஸ் 0.19% குறைவு |
| 3 | 770/ 2015/ எம்.டி2 | வார்டு எண்.46க்கு உட்பட்ட கணபதி பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்படவுள்ள நடைபாதை மேம்பாலத்திற்கு நகரும் படிக்கட்டுகள் அமைத்தல் | 75.00 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 5.01% அதிகம் 2). திரு. ஆர்.உமாபதி 5.08 % அதிகம் | தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 0.12% குறைவு (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளில் அவசர அவசியம் கருதி மாண்புமிகுமேயர் அவர்கள் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம். ந.க.எண்.1116/2015/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 11 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

**பொருள்:** நில உரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – கிருஷ்ணராயபுரம் கிராமம், சர்வே வார்டு J (10), பிளாக்-10, டி.எஸ்.நம்.5035 பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 70 சென்ட் இடத்தினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பாப்பநாயக்கன்பாளையம் துணை மின் நிலையம் அமைக்க நிலமதிப்பின் அடிப்படையில் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது – 24 அடி அணுகு சாலை ஒதுக்கீடு செய்து மீதமுள்ள இடத்தினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்க கேட்டுக் கொண்டது – தொடர்பாக.

**பார்வை:** தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கோவை அவர்களின் கடித எண்.த.பொ/ப/கோவை/செபொ/சீரியல் கோ.பா.நா.பாளையம் அ.எண்.436/2016, நாள்.23.04.2016.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு J (10), பிளாக்-10, டி.எஸ்.நம்.5035 பகுதியில் உள்ள 70 சென்ட் இடத்தினை, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பாப்பநாயக்கன்பாளையம் துணை மின் நிலையம் அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) இடத்தினை வழஙக, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.7,62,30,000/-ல் மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட மின்வாரியத்திற்கு சொந்தமான 12.11 சென்ட் இடத்திற்குண்டான நில மதிப்பு தொகை ரூ.1,36,87,690/- ஐ கழித்து வித்தியாச தொகை ரூ.6,30,42,310/- மட்டும் மட்டும் செலுத்த கேட்டு கொள்ளப்பட்டது.

இந்நிலையில் திரு.ராமச்சந்திரன் என்பவர், தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யவுள்ள இடத்தில் உள்ள சாலை பகுதியில் திட்டசாலை பயன்பாட்டினை தவிர வேறு பயன்பாட்டிற்கு இடத்தினை பயன்படுத்த கூடாது எனக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு எண்.31709/2013 மற்றும் பல்வகை மனு எண்.1/2013ல் தொடர்ந்த வழக்கில், சென்னை உயர்நீதி மன்றம் "Interim order to maintain Status-quo" உத்திரவு பிறப்பித்துள்ளதால், தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் மூலமாக துணைமின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்தும், மேற்படி வழக்கின் மனுதாரர் திரு.K.ராமச்சந்திரன் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் 24 அடி அணுகு சாலைக்கு மனுதாரர் சம்மதித்துள்ளதால், மனுதாரருக்கு 24 அடி சாலை ஒதுக்கீடு செய்து மீதமுள்ள நிலத்தினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழஙக நடிவடிக்கை எடுக்குமாறு பார்வையில் காண் கடிதத்தின்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) 70 சென்ட் இடத்தினை நிலமதிப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், 24 அடி அணுகு சாலைக்கான நிலப்பரப்பு நீங்கலாக மீதமுள்ள நிலத்திற்குண்டான நிலமதிப்பு தொகையை மட்டும் மாநகராட்சிக்கு செலுத்தி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இடத்தினை பெற்றுக்கொள்ள உரிய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.13617/2010/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 24.06.2016</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள்/ ஒப்பந்தப் புள்ளி திறந்த நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9285/ 2015/ எம்.டி.4 | வார்டு எண் 92–க்கு உட்பட்ட அண்ணா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 29.50 | 22.02.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.கே.எஸ்.ஆர். & கோ 0. 16 % குறைவு 2). தி/ள்.திருமூர்த்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 1. 91% அதிகம் | தி/ள்.கே.எஸ்.ஆர். & கோ 0. 16 % குறைவு |
| 2 | 734/ 2016/ எம்.டி.4 | வார்டு எண் 95–க்கு உட்பட்ட கிரீன் கார்டன் பகுதியில் தார்சாலை அமைத்தல். | 28.50 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திரு. ஆர். சுந்தர் ராஜ் 0. 02 % குறைவு 2). திரு. ஆர். தனபால் 1. 51% அதிகம் | திரு. ஆர். சுந்தர் ராஜ் 0. 02 % குறைவு |
| 3 | 728/ 2016/ எம்.டி.4 | வார்டு எண் 95–க்கு உட்ப்பட்ட அம்மன் நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 20.50 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திரு. ஆர். சுந்தர் ராஜ் 0. 02 % குறைவு 2). திரு. ஆர். தனபால் 1. 51% அதிகம் | திரு. ஆர். சுந்தர் ராஜ் 0. 02 % குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 9554/ 2015/ எம்.டி.4 | வார்டு எண் 98-ல் உள்ள சாரதாமில் ரோடு பகுதியில் மழைநீர் வடிகாலுக்கு மூடுபலகை அமைத்தல் பணி | 28.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). திரு. எம்.ராம்ராஜ் 1. 50 % குறைவு<br>2). தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2. 35% குறைவு<br>3). தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 1. 78% அதிகம் | தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2. 35% குறைவு |
| 5 | 9575/ 2015/ எம்.டி.4 | வார்டு எண் 98-ல் உள்ள இளங்கோ நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 24.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). திரு. எம்.ராம்ராஜ் 0.77 % குறைவு<br>2). தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2. 98% குறைவு<br>3). தி/ள். கோமதியம்மன் & கோ 0.20 % அதிகம்<br>4).தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 1. 62% அதிகம் | தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2. 98% குறைவு |
| 6 | 9560/ 2015/ எம்.டி.4 | வார்டு எண் 98–ல் உள்ள லட்சுமணன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 23.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0. 07% குறைவு<br>2). திரு. ஆர்.ராஜா 1.98 % அதிகம் | தி/ள்.அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0. 07% குறைவு |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண். 9285/2015/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகள், பாதாள சாக்கடை குழாய் அமைப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், குடிநீர் குழாய்கள் மற்றும் கேபிள்கள் பதிப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளைப் புதுப்பிக்கவும் மற்றும் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளில் ரூ.4407/– லட்சம் மதிப்பீட்டில் TUFIDCO கடன் 90 % சதவீதம் ரூ.3966/– லட்சம் மற்றும் மாநகராட்சியின் பங்கு 10 % ரூ.441 லட்சம் என்ற நிதி ஆதாரத்துடன் சாலைப்பணிகள் மேற்கொள்ள அரசாணை (பவ) எண்.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.01.2016ல் அரசு உத்திரவு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி திட்டத்திற்கு ரூ.3966/– லட்சம் கடன் வழங்க ஒப்புதல் அளித்தும் மற்றும் அதற்கான நிபந்தனைகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வழங்க தெரிவித்து தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், TUFIDCO சென்னை அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/TIFS/1077/AM(S)/2016 நாள்.09.02.2016ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் விபரம் கீழ்வருமாறு

1. Resolved that the Coimbatore Corporation authorizes the Commissioner to borrow a loan of Rs.3966.00 lakhs under the TUFIDCO Infrastructure funding scheme for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO:

| S. NO. | Name of the Project | No.of Roads | Length in Kms | Rs.in lakh | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Project Cost | TUFIDCO loan 90 % | ULB Contribution 10 % |
| 1 | Formation of roads | 71 | 15.53 | 1913.00 | 1721.40 | 191.60 |
| 2 | Relaying of damaged roads due to under ground sewerage scheme, water supply scheme and other infrastructure scheme | 186 | 45.46 | 2494.00 | 2244.60 | 249.40 |
| | Total | 257 | 60.99 | 4407.00 | 3966.00 | 441.00 |

2. Resolved that the Coimbatore Corporation agrees the terms and conditions mentioned in the loan sanction letter. The council adopts the following financial projection made by the Commissioner for repayment of loan and undertakes.

a.) The collection of property tax – a minimum of 58 % from 2015-16 onwards.

b.) The collection of professional tax – a minimum of 61% from 2015-16 onwards

C.) In the Non tax receipt, Lease collection – a minimum of 84% from 2015-16 onwards.

d.) The collection of user charges for UGSS project – a minimum of 36 % from the year 2015-16 onwards.

e.) The collection of user charges for water supply – a minimum of 71% from 2015-16 and onwards.

f.) The Corporation undertakes to increase the property tax demand by a minimum of 25% of the existing rates, once in every 5 years from the financial year 2017-18 onwards.

g.) The Corporation undertaking to increase the profession tax demand by 25% of the existing rates, once in every 5 years from the financial year 2018-19 onwards.

h.) The Corporation undertakes to increase the lease demand for annual lease atleast 5 % every year and in case of 3 years lease, a minimum of 15% is to be increased.

i.) The Corporation shall cap its CAPEX only to the extent of the available net surplus after meeting out all the adhere to the liabilities from 2015-16 onwards.

j.) The Corporation shall adhere to the FOP submitted for this project as regards the expenditure.

k.) The Corporation shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented , the short fall if any arising in any period shall not affet the repayment of its dues to TUFIDCO and in such case Corporation will approach the Director of Municipal Administration to adjust the said dues out of the SFC funds payable to Corporation on the first priority basis.

3) Further resolved to authorize the Commissioner to execute the load agreement and other document, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of Coimbatore Corporation on the documents to be executed with TUFIDCO on behalf of the Coimbatore Corporation.

4) Further resolved to operate the escrow account in which the property tax, professional tax collection and all other revenues deposited by the Corporation and it shall be escrowed favouring TUFIDCO. The tripartoate escrow agreement should be made with TUFIDCO to make repayment of dues. This account will be in existence till the time of clearing the loan and other dues of this project to TUFIDCO.

5) Further resolved that the council of Coimbatore Corporation is authorizing the Commissioner, Coimbatore Corporation to make necessary budgetary provision in the annual budget for the repayment of principal interest and other money due for the loan availed for the project proposal to TUFIDCO.

6) Further resolved to agree to adjust by the Director of Municipal Administration/ Government of tamil Nadu for remittance from the funds receivable for Coimbatore Corporation such as the State Finance Commission, Devolution of funds, grants, share on tax due to Coimbatore Corporation from the State Government, in the event of default in the repayment of principal, interest and other monery due to TUFIDCO in respect of loans availed for this project.

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்று TUFIDCO நிறுவனத்திடம் ரூ.**3966/–** லட்சம் கடன் பெற்று மேற்படி சாலைப்பணிகளை மேற்கொள்வதற்கு அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.**2689/2015**/எம்.டி.**2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 14 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 15**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க TUFIDCO நிறுவனத்தின் மூலம் ரூ.**44.07** கோடி கடன் உதவியில் இரண்டாம் கட்டமாக **1** சிப்பத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டுதல் – தொடர்பு.

******

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகள், பாதாள சாக்கடை குழாய் அமைப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், குடிநீர் குழாய்கள் மற்றும் கேபிள்கள் பதிப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளைப் புதுப்பிக்கவும், TUFIDCO நிறுவனத்தின் மூலம் ரூ.**9989.94** இலட்சங்களை வருடத்திற்கு **10.75** சதவீத வட்டி விகிதத்தில் கடன் உதவி பெற்று வழங்கக்கோரி கருத்துரு மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பியதில், அரசாணை எண்.**21** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MC-II) துறை நாள்.**30.01.2016** ல் அனுப்பப்பட்ட மதிப்பீடுகளில் தேர்வு செய்த ரூ.**44.07** கோடி மதிப்பீடுகளுக்கு **10.60** சதவீதம் வட்டி விகிதத்தில் TUFIDCO நிறுவனத்திடமிருந்து கடனாக ரூ.**39.66** கோடி (பத்தாண்டுகளில் திரும்ப செலுத்தவும்) மீதமுள்ள ரூ.**4.41** கோடியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்தும் சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியும், முதன்மைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**1041/2016**/DO1 நாள்.**01.02.2016**ல் **20** சிப்பங்களாக பிரித்து இச்சாலைப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டதைத்தொடர்ந்து, முதற்கட்டமாக **18.02.2016** அன்று **19** சிப்பங்களுக்கான சாலைப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதனை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக **03.03.2016** அன்று ஒரு சிப்பத்திற்கான சாலைப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டப்படுகிறது.

| பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததார் |
|---|---|---|---|
| சிப்பம் எண் 20 ந.க.எண். **2689/ 2015**/எம்.டி.**2** | | | |
| பாலக்காடு பிரதான சாலை முதல் சுண்டக்காமுத்தூர் புட்டுவிக்கி சாலை வரையுள்ள இணைப்பு சாலைக்கு தடுப்பு சுவர்ருடன் தார் தளம் அமைத்தல். | 1183.12 | 1.திரு.ராபர்ட் ராஜா 12.89 % அதிகம்<br>2.திரு. ஏ.வெங்கடாச்சலம் 17.89 % அதிகம் | திரு.ராபர்ட் ராஜா 4.99 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணியினை ஏற்க அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2689/2015/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 15 நாள் 24.06.2016**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் உள்ள குடிசைப்பகுதிகள், அழுத்தம் குறைவாக உள்ள பகுதி, மேடான பகுதி, பிரதான குழாய் கசிவு ஏற்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்பொழுது குடிநீர் தடை ஏற்படும் காலங்கள் மற்றும் அன்றாட குடிநீர் சம்பந்தமான புகார் பிரச்சனைக்கேற்றவாறு 1)பாரதி பூங்கா மேல்நிலைத் தொட்டி (HLR), 2)புலியகுளம் மேல்நிலைத்தொட்டி 3)வரதராஜபுரம் மேல்நிலைத் தொட்டி 4)கணபதி (MSR) மேல்நிலைத் தொட்டி, மற்றும் 5)சாரதாமில் (சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் தனியார் டேங்கர் லாரியின் ஒப்பந்தத் தொகை முடிவடையவுள்ளதை கருத்தில் கொண்டு புதியதாக உத்தேச செலவினம் ரூ 75.00 இலட்சத்திற்கு மாமன்றத் தீர்மான எண். 340 நாள்-29.01.2016 –ல் நிர்வாக அனுமதி பெற்று இப்பணிக்கு கடந்த 01.03.2016 அன்று முதல் அழைப்பாக இரண்டு உறைகள் முறையில் மின்னனு (e-tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.என்.கோபால், திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.ஜி.சசிக்குமார் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் தகுதிகாண் கூறுகள் (Qualification criteria) திறனாய்வு செய்ததில் திரு.என்.கோபால், திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.ஜி.சசிக்குமார் ஆகியோர் தேர்வு பெற்றுள்ளனர்.

எனவே, மேற்படி தகுதிகாண் கூறுகளில் தேர்வு பெற்றுள்ள திரு.என்.கோபால், திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.ஜி.சசிக்குமார் ஆகியோர் சமர்பித்துள்ள விலைப்புள்ளி உறைகளை திறக்க ஆணையர் அவர்கள் 25.05.2016ல் ஒப்புதல் வழங்கியுள்ளதைத் தொடர்ந்து 27.05.2016ல் விலைப்புள்ளி உறைகள் திறக்கப்பட்டதில் திரு.என்.கோபால், திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.ஜி.சசிக்குமார் ஆகியோர்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு ரூபாய் | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு ரூபாய் |
| 1 | திரு என்.கோபால் | 1 | 899.00 | 1 | 525.00 |
| 2 | திரு. கே.எஸ்.ராமலிங்கம் | 1 | 870.00 | 1 | 525.00 |
| 3 | திரு. ஜி.சசிக்குமார் | 1 | 891.00 | 1 | 550.00 |

பட்டியலில் உள்ள விலைப்புள்ளிகளில் முதலாவதாக குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு கே.எஸ்.ராமலிங்கம் அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க கேட்டதில், அவர் கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு.கே.எஸ்.ராமலிங்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை (விலைக்குறைப்பிற்குபின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திற்கு) ஏற்க, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | | விலைக்குறைப்பிற்கு பின் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | 9000லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் |
| 1 | திரு.கே.எஸ்.ராமலிங்கம் | 870 | 525 | 870 | 520 |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 12726/2015/ எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள்/ திறக்கப்பட்ட நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9185/ 2015/ எம்.டி2 | வார்டு எண் 13-க்குட்பட்ட பாபா வீதி, அண்ணா வீதி, ஜெகஜீவன் ராம் வீதி, பார்த்தசாரதி வீதி மற்றும் விநாயகர் கோவில் வீதி ஆகிய பகுதிகளில் மழை நீர் வடிகால் திரும்ப கட்டுதல் | 26.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.09% குறைவு 2). திரு.ஆர்.ராஜன் 0.45 % அதிகம் | தி/ள். அழகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.09% குறைவு |
| 2 | 9930/ 2015/ எம்டி2 | வார்டு எண் 18–க்குட்பட்ட சுண்டப்பாளையம் ரஙகசாமி நகர் மற்றும் சேரன் செஙகுட்டுவன் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் . | 29.98 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜே. ராபர்ட் ராஜா 0.11 % குறைவு 2).தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 8.31 % அதிகம் | திரு. ஜே. ராபர்ட் ராஜா 0.11 % குறைவு |
| 3 | 8074/ 2015/ எம்டி2 | வார்டு எண் 19–க்குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை முதல் வடவள்ளி பிரதான சாலை பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல். | 29.80 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் 0.49% அதிகம் 2). திருமதி. கே.பஙகஜம் 8.55% அதிகம் | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் 0.12% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | 9919/ 2015/ எம்டி2 | வார்டு எண் 22–க்குட்பட்ட இராஜேந்திரப் பிரசாத் வீதி பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல். | 22.00 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திரு.ஆர். நடராஜன் 5.01 % அதிகம் 2). திருமதி. ஆர்.சரோஜினி 6.59 % அதிகம் | திரு.ஆர். நடராஜன் 0.12 % குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | 11759/ 2015/ எம்.டி2 | வார்டு எண் 44-க்குட்பட்ட நல்லாம்பாளையம் சாலையில் சஙகனூர் சாலையிலிருந்து ஜெய்நகர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி வரை பிரதான குடிநீர் உந்து குழாய் பதித்தல் | 23.00 | 04.03.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 0.20% அதிகம் 2). திரு. ஆர்.உமாபதி 0.10 % குறைவு | திரு. ஆர்.உமாபதி 0.10 % குறைவு |
| 6 | 9921/ 2015/ எம்.டி2 | வார்டு எண் 22-ல் உள்ள காமராஜபுரம் பிரதான சாலை மற்றும் காமராஜபுரம் 3-வது பகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல் | 25.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 7.14% அதிகம் 2). திரு.ராபர்ட் ராஜா 0.02 % குறைவு | திரு.ராபர்ட் ராஜா 0.02 % குறைவு |
| 7 | 9917/ 2015/ எம்.டி2 | வார்டு எண் 22-க்குட்பட்ட ராமசாமி சாலை , பொன்னுசாமி சாலை மற்றும் சாஸ்திரிவீதி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 21.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 7.31% அதிகம் 2). திரு.ராபர்ட் ராஜா 0.08 % குறைவு | திரு.ராபர்ட் ராஜா 0.08 % குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 9920/ 2015/ எம்.டி2 | வார்டு எண் 22-க்குட்பட்ட டாக்டர் சுப்பராயன் வீதி மற்றும் பைக்காரா ஆபீஸ் சாலை பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 27.00 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 7.38% அதிகம்<br>2). திரு.ராபர்ட் ராஜா 0.04 % குறைவு | திரு.ராபர்ட் ராஜா 0.04 % குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளில் அவசர அவசியம் கருதி பணிக்குழுத்தலைவர் அவர்கள் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9185/2016/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1540/ 2016/ எம்.டி2 | பில்லூர்–II குடிநீர் திட்ட குழாய்களில் மின்னியல் நீரளவு மானி வழங்கி பொருத்தல் மற்றும் 5 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரித்தல் | 70.50 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். டெலிப்லோ ஸ்ட்ரெயினர்ஸ் அன்டு பிரசர் வெசல்ஸ் 9.07% அதிகம்<br>2). தி/ள். லேண்ட்ராசாப்ட் 1.97 % அதிகம் | தி/ள். லேண்ட்ராசாப்ட் 1.96% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 2 | 1541/ 2016/ எம்.டி2 | பில்லூர்–II குடிநீர் திட்ட குழாய்களில் மின்னியல் நீரளவு மானி பொருத்தப்படவுள்ள பகுதிகளில் தேவையான கட்டுமான பணிகள் செய்தல் | 65.90 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.கிளாசிக் இன்ஜினியரிங எண்டர்பிரைசஸ் 0.03% குறைவு<br>2). திரு. கே.பி.செஙகோடன் 3.25 % அதிகம் | தி/ள்.கிளாசிக் இன்ஜினியரிங எண்டர்பிரைசஸ் 0.03% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின்அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்கள் முன்அனுமதி வழஙகியதற்கு பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1540/2016/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2015-16) -ன் கீழ் மதிப்பீடு ரூ.2000.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கீழ்கண்டுள்ளவாறு 11 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| பணியின் பெயர் | வார்டு எண் | சிப்பத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததார் |
|---|---|---|---|---|---|
| சிப்பம் எண் 1 | | | | | |
| நீலிக்கோணாம்பாளையம் பிரதான சாலை முதல் விஜயலட்சுமி நகர் சந்திப்பு முதல் தட்சன் தோட்டம் சந்திப்பு மற்றும் ஆர்.வி.எல். நகர் குறுக்கு சாலைகளில் மறு தார்தளம் அமைத்தல், காவேரி நகரில் மறுதார் தளம் அமைத்தல், வரதராஜபுரம் பிரதான சாலை முதல் காமராஜர் சந்திப்பிலிருந்து சி.எம்.சி காலனி மற்றும் ஹவுசிங்யூனிட் 'ஏ' விங மெயின் ரோடு வரையுள்ள பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல் | 58,59, 62 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.85 % அதிகம்<br>2.தி/ள்.ஜெ. ராபர்ட் ராஜா 9.50 % அதிகம் | தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.83 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 2 | | | | | |
| SIHS காலனியில் மறுதார் தளம் அமைத்தல், சூரியா நகர் மற்றும் காமாட்சி நகரில் புதிய தார் தளம் அமைத்தல், கண்ணன் நகர் மற்றும் செந்தில் நகர் எக்ஸ்டன் பகுதிகளில் புதிய தார் தளம் அமைத்தல், நேரு பூங்கா சாலை, பூங்கா வீதி மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலைகளில் மறுதார் தளம் அமைத்தல், ஐயர் லே அவுட்குறுக்கு சாலைகளில் மற்றும் வடக்கு வீதிகளில் மறு தார்தளம் அமைத்தல் | 59,62 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.பி.செந்தில் அன் கோ 10.93 % அதிகம்<br>2.தி/ள்.ஜெ. ராபர்ட் ராஜா 4.30 % அதிகம் | தி/ள்.ஜெ. ராபர்ட் ராஜா 4.28 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 3 | | | | | |
| ராமலிங்க நகர் 3வது குறுக்கு சாலை மற்றும் ரத்தின சபாபதி வீதியில் மறு தார்தளம் அமைத்தல், எம்.ஆர்.கே.லே அவுட் மத்திய குறுக்கு வீதி, அண்ணா வீதி மற்றும் ராதாகிருணணன் சாலை பகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல், ராஜா அண்ணாமலை ரோடு (அழகேசன் ரோடு முதல் என்.எஸ்.ஆர். மெயின் ரோடு வரை) மறு தார்தளம் அமைத்தல், ராஜா அண்ணாமலை ரோடு (பாரதி பார்க் மெயின் ரோடு முதல் அழகேசன் ரோடு வரை) மறு தார்தளம் அமைத்தல், T.V. சாமி ரோடு – D.B.ரோடு முதல் மேட்டுப்பாளையம் ரோடு வரை மறு தார்தளம் அமைத்தல் | 12,13, 22,23 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.எம்.சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.97 % அதிகம்<br>2.தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் 14.66 % அதிகம் | தி/ள்.எம்.சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.95 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிப்பம் எண் 4 | | | | | |
| பாரதி பார்க் சாலை எண்– 2 (மேட்டுப்பாளையம் மெயின் ரோடு முதல் மேற்கு ராஜா அண்ணாமலை ரோடு வரை) மறு தார்தளம் அமைத்தல், பாரதி பார்க் சாலை எண்– 2 (மேற்கு ராஜா அண்ணாமலை ரோடு முதல் மேற்கு தடாகம் ரோடு வரை) மறு தார்தளம் அமைத்தல், D.B.ரோடு – ராமச்சந்திரா ரோடு முதல் சுந்தரம் வீதி சந்திப்பு வரை மறு தார்தளம் அமைத்தல் | 22,24 | 199.35 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.திரு.ஏ. அம்மாசையப்பன் 4.95 % அதிகம்<br>2.திரு.ஏ. வெஙகடாச்சலம் 24.51 % அதிகம் | திரு.ஏ. அம்மாசையப்பன் 4.93 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 5 | | | | | |
| குறிஞ்சி நகர், சிவக்குமார் லே அவுட், ஸ்டேட் பாங்க் காலனி மறு தார்தளம் அமைத்தல், சிவசக்தி நகர், P & T நகர் மற்றும் மாடல் நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல், சஙகரப்பன் தோட்டம் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 27,28, 29 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் 5.48 % அதிகம்<br>2.திரு.ஏ. வெஙகடாச்சலம் 8.83 % அதிகம் | தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் 4.99 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 6 | | | | | |
| பாலு கார்டனில் ,முருகன் நகர் பகுதியில், மறு தார்தளம் அமைத்தல் வி.என்.எஸ் நகர் மற்றும் கோரத்தோட்டம் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல், மணியக்காரப்பாளையம் பகுதிக்குட்பட்ட ராஜீவ் காந்தி ரோடு முதல் கணேஷ் லே அவுட் வரை மறு தார்தளம் அமைத்தல் | 27,40, 41 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1. திரு.ஏ. வெஙகடாச்சலம் 4.93 % அதிகம்<br>2. திரு.ஏ. அம்மாசையப்பன் 9.66 % அதிகம் | திரு.ஏ. வெஙகடாச்சலம் 4.91 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 7 | | | | | |
| ஆதி திராவிடர் காலனி, ரூபா நகர், விவேகானந்தர் நகர், மற்றும் பாலாஜி நகர் மறுதார் தளம் அமைத்தல், சாரதா நகர், இந்திரா நகர், குமரன் கார்டன், மணிகண்டன் நகர் மற்றும் சக்தி நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 89,92, 93 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1. தி/ள்.வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்சர் 5.81 % அதிகம்<br>2. தி/ள்.ஜெ. ராபர்ட் ராஜா 8.61 % அதிகம் | தி/ள்.வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்சர் 4.99 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 8 | | | | | |
| சமுதாய கூட சாலை மற்றும் வடக்கு ஹவுசிங யூனிட் சாலையில் மறு தார் தளம் அமைத்தல், துளசி கார்டன் மற்றும் ஹர்சா கார்டன் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல், முதலியார் வீதி, மதுரை வீரன் கோயில் வீதி, எம்.ஜி.ஆர் நகர் பழைய சாலை, கணேசபுரம் மற்றும் ஸ்ரீநிவாசா நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் . | 77, 78, 94, 97, 99,100 | 200.00 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.பி.செந்தில் அன் கோ 5.60 % அதிகம்<br>2.தி/ள்.ஜெ. ராபர்ட் ராஜா 8.15 % அதிகம் | தி/ள்.பி.செந்தில் அன் கோ 4.99 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 9 | | | | | |
| வி.சி.வி சாலையில் மறு தார் தளம் அமைத்தல், சண்முகா தியேட்டர் சாலை, ஆர்.ஆர் லேஅவுட் மற்றும் அம்சா லேஅவுட் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல், வெரைட்டி ஹால் சாலையில் மறு தார் தளம் அமைத்தல் | 25,81 | 127.50 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.திரு.கே.வி.கே. செந்தில்நாதன் 4.99 % அதிகம்<br>2.தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 9.49 % அதிகம் | திரு.கே.வி.கே. செந்தில்நாதன் 4.98 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| சிப்பம் எண் 10 | | | | | |
|---|---|---|---|---|---|
| டாடாபாத் 9,10 மற்றும் 11 முதலான வீதிகளில் மறுதார் தளம் அமைத்தல், காந்திபுரம் 9வது வீதி தொடர்ச்சியில் 100அடி சாலை முதல் வடக்கு வரை மறுதார்தளம் அமைத்தல், டாக்டர் ராதாகிருஷ்ணா சாலையில் அழகப்பா சாலை முதல் காந்திபுரம் 4வது வீதி தொடர்ச்சி வரை மறுதார் தளம் அமைத்தல், விவேகானந்தா சாலையில் மறுதார் தளம் அமைத்தல். | 51 | 118.60 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் 4.95 % அதிகம்<br><br>2.தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 7.97 % அதிகம் | தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் 4.93 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| சிப்பம் எண் 11 | | | | | |
| ஆறுமுகம் நகர், குறுக்கு சாலை 1,2,3,4 மற்றும் முனுசாமி நகர் பகுதியில் மறு தார் தளம் அமைத்தல், கன்னிகாபரமேஸ்வரி நகர் குறுக்கு சாலை 1,2,3 முருகன் நகர் குறுக்கு சாலை 1,2,3,4 நேரு நகர் குறுக்கு சாலை 1,2,3,4 ராமலிங்கஜோதி நகர் மற்றும் ஸ்ரீராம் காலனியில் மறு தார் தளம் அமைத்தல், சுக்ரவார்பேட்டை மற்றும் ரஙகே கவுடர் வீதியில் மறு தார் தளம் அமைத்தல், எல்லன் வீதி, சாமராவ் வீதி மற்றும் பெருமாள் கோயில் வீதி பகுதியில் மறு தார் தளம் அமைத்தல். | 74,68, 80,82 | 154.550 | 07.06.16 முதலாம் அழைப்பு | 1.திருமதி. மீனாள் 10.28 % அதிகம்<br><br>2.தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 6.78 % அதிகம் | தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.99 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதிக்கு பணிகளின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியத்திற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1069/2016/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 20**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11067/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 61–க்குட்பட்ட சிங்கை நகர் II பகுதியில் மறு தார்தளம் அமைத்தல். | 71.00 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜே. ராபர்ட் ராஜா 4.87 % அதிகம்<br>2). தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 9.12 % அதிகம் | திரு.ஜே. ராபர்ட் ராஜா 0.12 % குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 11400/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 61—க்குட்பட்ட திருவள்ளுவர் நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல். | 62.00 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜே. ராபர்ட் ராஜா 5.83 % அதிகம்<br>2). திர்/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 11.70 % அதிகம் | திரு.ஜே. ராபர்ட் ராஜா 0.12 % குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 1557/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 56—க்குட்பட்ட ஃபன் மால் அருகில் பாலம் கட்டுதல். | 75.00 | 03.03.16 முதலாம் அழைப்பு | 1). திர்/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் 4.79% அதிகம்<br>2). திரு.கே. பஙகஜம் 10.96 % அதிகம் | திர்/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் 0.12% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | 5590/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 32—க்குட்பட்ட ரெவின்யூ நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல். | 69.00 | 03.03. 16 முதலாம் அழைப்பு | 1). திர்/ள். எஸ்.கே.எம்.எஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.99% அதிகம்<br>2). திரு.ஏ. அம்மாசையப்பன் 9.40 % அதிகம் | திர்/ள். ஏஸ்.கே.எம்.எஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.12% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | 11565/ 2015/ எம்.டி.3 | வார்டு எண்37—க்குட்பட்ட டைடல் பார்க் சாலை சீரமைத்தல் மற்றும் புதிய வழித்தடம் அனுகுசாலை அமைத்தல் பணி | 25.50 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). திர்/ள். ஜே.பி.எஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 22.99% அதிகம்<br>2). திர்/ள். கோமதியம்மன் & கோ 0.31% அதிகம் | திர்/ள். கோமதியம்மன் & கோ 0.12% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |
| 6 | 11402/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 61—க்குட்பட்ட அஷ்தாந்திர நாய்க்கர் வீதியில் தார்தளம் புதுப்பித்தல். | 28.50 | 24.05.16 முதலாம் அழைப்பு | 1). திர்/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.44 % அதிகம்<br>2). திரு.ஜே. ராபர்ட் ராஜா 0.03 % குறைவு | திரு.ஜே. ராபர்ட் ராஜா 0.03 % குறைவு |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.11067/2015/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 21**

பொருள் பணியமைப்பு — கோயம்புத்தூர் மாநகராட்சி — துப்புரவு ஆய்வாளர் பயிற்சி முடித்த துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் களப்பணி உதவியாளர் — நகராட்சிப் பணிகளில் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு கோருதல் தொடர்பாக.

பார்வை
1. அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை கடித எண். 10287/மாந5/2016—1 நாள் 19.05.2016.
2. திரு. எம். செல்வராஜ், துப்புரவு பணி மேற்பார்வையாளர், தெற்கு மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள் 18.06.2016.
3. திரு. ஜி. ராமசாமி, துப்புரவு பணி மேற்பார்வையாளர், வடக்கு மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள் 18.06.2016.
4. திரு. எஸ். தேவேந்திரன், களப்பணி உதவியாளர், கிழக்கு மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள் 18.06.2016.

————————

பார்வை 2 முதல் 4 வரை உள்ள விண்ணப்பங்களில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் (பொறுப்பு) ஆகப்பணிபுரிந்து வரும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் திரு. எம். செல்வராஜ், திரு. ஜி. ராமசாமி மற்றும் களப்பணி உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு. தேவேந்திரன் ஆகியோர் தங்களை இம்மாநகராட்சியிலிருந்து விடுவித்து நகராட்சிகளில் காலியாக உள்ள சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக பார்வை 1ல் காணும் கடிதத்தில் கோரியுள்ளவாறு மாமன்றத்தின் அனுமதி வேண்டியுள்ளனர்.

மேற்கண்ட பணியாளர்கள் 2009ம் ஆண்டு பொது சுகாதாரம் நோய் தடுப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு துறையின் மூலம் சுகாதார ஆய்வாளர் பயிற்சியினை முடித்துள்ளனர். மேலும் நிர்வாக நலன் கருதி பணியேற்பாட்டின் கீழ் துப்புரவு ஆய்வாளர் பொறுப்பு வழங்கப்பட்டு பணி புரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது சுகாதாரம் பணியமைப்பு விதிகள் 1996ன்படி துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடம் அயற்பணி அடிப்படையில் அல்லது பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்ய கீழ்க்கண்ட கல்வித் தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

“Must be a B.Sc., (Chemistry) Graduate and must have passed Food Inspectors Course and Sanitary Inspectors Course conducted in any institution recognized by the Government of Tamil Nadu”.

மேற்கண்ட பணியாளர்கள் B.Sc., (Chemistry) கல்வித் தகுதியினை பெறாததால், கோயம்புத்தூர் மாநகராட்சியில் பதவி உயர்வு வழங்க வழிவகை இல்லை. எனவே தங்களை வேறு நகராட்சிகளில் துப்புரவு ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு செய்து பணி மாறுதல் செய்திட அனுமதி வழங்குமாறு கோரியுள்ளனர்.

மேலும் பார்வை 1ல் காணும் அரசுக் கடிதத்தில், துப்புரவு மேற்பார்வையாளர்களை சுகாதார ஆய்வாளர்களாக பதவி உயர்வு வழங்க மாமன்றத் தீர்மானம் பெற்று ஆணையாளரின் செயற்குறிப்பு பெற்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் (பொறுப்பு) ஆகப் பணிபுரிந்து வரும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் திரு. எம். செல்வராஜ் , திரு. ஜி. இராமசாமி மற்றும் களப்பணி உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு. எஸ். தேவேந்திரன் ஆகியோர் தங்களது விண்ணப்பங்களில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை நகராட்சிப் பணியில் துப்புரவு ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்த உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழியாக அரசிற்கு அனுப்ப மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.4885/2016/எம்சி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 21 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 22**

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. பி. செல்வகுமார், பதிவுரு எழுத்தர், மத்திய மண்டலம் – இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவி உயர்விற்கு விதி தளர்வு செய்து வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்ப –மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

பார்வை
1. இவ்வலுவலக கடித ந.க.எண்.14250/2008/எம்சி2 நாள்.20.04.2015
2. திரு. செல்வகுமார், பதிவுரு எழுத்தர், மத்திய மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள்.19.06.2015
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.52366/2012/எம்சிஎ 1 , நாள்.28.01.2015
4. திரு. செல்வகுமார், பதிவுரு எழுத்தர், மத்திய மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள்.12.10.2015,16.10.2015 மற்றும் 27.10.2015.
5. ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்.06.04.2016.

------

பார்வை 4ல் காணும் கடிதங்களில் திரு.பி. செல்வகுமார், பதிவுரு எழுத்தர், மத்திய மண்டலம் அவர்கள் 15.07.2009 அன்று இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார். பணியில் சேர்ந்து இரண்டு வருடத்திற்குள் ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சில் ஏதாவது ஒன்றில் மேல்நிலையும் மற்றொன்றில் கீழ்நிலையும் தேர்ச்சி பெற்றும் மற்றும் +2 தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழஙகப்பட்டது என்றும் தற்போது +2 தேர்ச்சி பெற்று உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனது இடது கை போலியோவால் ஊனம் ஏற்பட்டுள்ளதால் தட்டச்சு செய்ய இயலாது எனவும், மாற்றுத் திறனாளிக்கான தொகை ரூ.1000/– பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். தட்டச்சில் தேர்ச்சி பெறாததால் மீண்டும் பதிவுரு எழுத்தராக பணி இறக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தன்னுடைய கல்வித் தகுதியின் அடிப்படையிலும் மாற்றுத் திறனாளி என்ற அடிப்படையிலும் விதி தளர்வு செய்து 14.07.2009ம் தேதி உத்திரவின்படி மீண்டும் தனக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்குமாறும் கோரியுள்ளார்.

இதன் தொடர்பாக 02.08.2013ம் தேதிய இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக இவருக்கு, 1996ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகளின்படியும், அரசாணைஎண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள். 27.09.1996ன்படி இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவி உயர்விற்காக தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியில் தமிழ் மற்றும் ஆஙகில தட்டச்சில் ஒன்றில் மேல்நிலையும் மற்றொன்றில் கீழ்நிலையும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற விதி எண்.4ஐ தளர்வு செய்து பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக அரசிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக பார்வை 1–ல் காணும் செயற்குறிப்பு அனுப்பிவைக்கப்பட்டது.

மேற்படி கடிதத்திற்கு பார்வை 3ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Regarding the request of Thiru.P. Selvakumar, who is aspiring for promotion without the requisite qualification, is neither permissible in rules nor advisable for better administration. As therequired qualification cannot be relaxed, the representation of Thiru.P. Selvakumar is rejected and the individual shall be informed accordingly.

திரு.பி. செல்வகுமார், பதிவுரு எழுத்தர் அலர்கள், பார்வை 4–ல் காணும் விண்ணப்பஙகளில், மாற்றுத்திறனாளி என்ற அடிப்படையில், தன்னால் தட்டச்சு செய்ய இயலாது என்பதால், பணிவிதிகளுக்கு விலக்களித்து இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளார்.

திரு.பி. செல்வகுமார், பதிவுரு எழுத்தர் அவர்களின் பணிப்பதிவேட்டின்படி 17.01.1985ம் தேதியன்று அலுவலக உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். 14.12.2000ம் தேதி முதல் பதிவுரு எழுத்தராக பதவி உயர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

இதற்கிடையில் 16.07.2009ம் தேதி முதல் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழஙகப்பட்டு 26.12.2012ம் தேதி வரை இளநிலை உதவியாளராக பணிபுரிந்துள்ளார். ஆணையர் அவர்களின் 27.12.2012ம் தேதிய உத்திரவின்படி பணிவிதிகளின்படி தட்டச்சில் தேர்ச்சி பெறாத காரணத்தினால் மீண்டும் பதிவுரு எழுத்தராக பணியிறக்கம் செய்யப்பட்டது.

இவர் மாற்றுத் திறனாளியாவார். இவருக்கு 40% இடது கை ஊனம் உள்ளது என ஊனமுற்றோருக்கான மருத்துவச் சான்றிதழில் சான்றளிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பணிவிதிகளின்படி இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பணியிடத்திற்கான கல்வி தகுதி விபரம் பின்வருமாறு :

1. +2 தேர்ச்சி
2. தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் ஏதாவது ஒன்றில் மேல்நிலையும் மற்றொன்றில் கீழ்நிலையும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இவர் 2013ம் ஆண்டு +2 தேர்ச்சி பெற்றுள்ளார். தனியரால் தட்டச்சு செய்ய இயலாத காரணத்தினால் இதனை சிறப்பினமாகக் கருதி இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவி உயர்விற்காக தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியில் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் ஒன்றில் மேல்நிலையும் மற்றொன்றில் கீழ்நிலையும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற விதி எண்.4ஐ தளர்வு செய்து இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவி உயர்வு வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக அரசிற்கு கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 14250/2008/எம்சி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 22 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 23**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 41 க்குட்பட்ட சத்தி பிரதான சாலை டெக்ஸ்டுல் பாலம் முதல் சிவசக்தி காலனி சந்திப்பு வரை சென்டர் மீடியன் தெருவிளக்கு கம்பங்கள் அமைத்தல் | 19.80 | 15.02.16 முதலாம் அழைப்பு | 1). தி/ள். R & N எலக்ட்ரிக்கல்ஸ் 6.02% அதிகம் 2). தி/ள்.சன்மேக் என்டர்பிரைசஸ் 7.00 % அதிகம் | தி/ள். R & N எலக்ட்ரிக்கல்ஸ் 4.99% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.12101/2015/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 23 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 24**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி அனைத்து பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு மஸ்தூர்கள் - ஒப்பந்ததாரர் மூலம் - நியமனம் செய்தல் - ஒப்பந்தபுள்ளி கோரி பணியாட்களை நியமனம் செய்யும் வரை ஏற்கெனவே உள்ள ஒப்பந்ததாரர் மூலம் பணியாட்களை நியமனம் செய்தது – பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

*****

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தாக்கம் தொடங்கவிருப்பதால் மாநகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதற்கு உண்டான சூழ்நிலைகள் தென்படுவதாலும் மற்றும் மாவட்டத்தின் சில பகுதிகளில் Housing Index சராசரி விகிதம் 10 மேல் இருப்பதாக தெரியவருவதால் கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக கொசுப்புழு அழிப்பு

பணியாளர்களை ஒரு வார்டுக்கு 13 பேர் வீதம் மாநகராட்சியின் 100 வார்டுகளுக்கு மொத்தம் 1300 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை உடனடியாக நியமிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டல வார்டு பகுதிகளில் டெங்குகாய்ச்சல் தடுப்புப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஒப்பந்ததாரர் மூலம் மண்டலம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோரி மஸ்தூர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரரை நியமனம் செய்ய காலதாமதம் ஆகும் என்பதாலும் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும் ஏற்கெனவே மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணியாளர்களை நியமனம் செய்து அனுபவம் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு தெரிவித்து ஒப்பந்ததாரர் மூலம் **முதற்கட்டமாக** மண்டலத்திற்கு 100 பணியாளர்கள் வீதம் அனைத்து மண்டலங்களிலும் மொத்தம் 500 பணியாளர்களை ஏற்கெனவே ஒப்பந்த துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகை மற்றும் நிபந்தனைகளின்படி ஐந்து மாதங்களுக்கு பணியமர்த்தம் செய்ய மாண்புமிகு மேயர் அவர்களிடம் 08.06.2016 அன்று முன் அனுமதி பெறப்பட்டு பணியாளர்கள் மண்டலம் வாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி

| Zone | Description of work | One day Salary Rs. | One Month Salary Rs. | Salary for 100 workers Rs. | 5 month salary for 100 workers Rs. |
|---|---|---|---|---|---|
| East Zone | Daily wages for engaging one mazdoor (category-1) for 8 hours duty cost including employee ESI, PF and other bebefits as per ccmc standard schedule of rates for 2014-15 | 288.40 | 8652 | 8,65,200 | |
| | Admin charges for engaging sanitary workers for soiled waste management on contract basis cost including employer ESI and PF contribution supply of necessary safety equipments(Hand gloves, cloth masks and gum boots) and providing supervisors for coordination etc complete | 147.00 | 4410 | 4,41,000 | |
| | | | | **13,06,200** | **65,31,000** |
| West | ‘’ | ‘’ | ‘’ | ‘’ | 65,31,000 |
| North | ‘’ | ‘’ | ‘’ | ‘’ | 65,31,000 |
| South | ‘’ | ‘’ | ‘’ | ‘’ | 65,31,000 |
| Central | ‘’ | ‘’ | ‘’ | ‘’ | 65,31,000 |

ஒரு மண்டலத்திற்கு ஐந்து மாதத்திற்கான உத்தேச செலவினம் ரூ. 65,31,000-/ஆகும். எனவே மேற்குறிப்பிட்டவாறு ஐந்து மண்டலத்திற்கான தனித்தனியான செலவினத்திற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 7711 /2016/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 24 நாள் 24.06.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

பொருள்: காந்திபுரம் உயர்மட்ட மேம்பாலம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – காந்திபுரம் சத்தி சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருதல் – இரண்டாம் அடுக்கு மேம்பால பணிகளை மேற்கொள்ளுதல் – ஆவாரம்பாளையம் சாலை சந்திப்பை கடந்து நீட்டிப்பு செய்ய மாநகராட்சியின் தீர்மானம் நிறைவேற்ற கோரியது – தொடர்பாக.

பார்வை:
1) கோட்டப்பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அவர்களின் கடிதம் க.எண்.973/2016.அ1, நாள்.16.06.2016.
2) மாண்புமிகு மேயர் அவர்களின் ஆய்வுக்குறிப்பு உத்தரவு

*******

பார்வை 1 ல் காண் கடிதத்தில், சத்தி சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலம் காந்திபுரம் முதல் அடுக்கு மேம்பாலம் கட்டும் முடிவுபெறும் நிலையில் உள்ளதாகவும், இரண்டாம் அடுக்கு பணி 100 அடி சாலை சின்னசாமி சாலையில் பணி நடைபெறவுள்ளதாக தெரிவித்து இரண்டாம் அடுக்கு மேம்பாலம் சின்னச்சாமி சாலையில் ஆவாரம்பாளையம் சாலை சந்திப்புக்கு முன்பாக முடிக்க திட்டமிடப்பட்டு இருந்ததை மாற்றி சாலை சந்திப்பை கடந்து நீட்டிப்பு செய்து அமைக்க தீர்மானம் நிறைவேற்றக் கோரப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் தெரிவித்துள்ளபடி, காந்திபுரம் மேம்பாலம் பணி சின்னச்சாமி சாலையில் ஆவாரம்பாளையம் சாலை சந்திப்புக்கு முன்பாக முடிக்க திட்டமிடப்பட்டால் சாலை சந்திப்பில் சிக்னல் அமைப்பு காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்பாக உள்ளதால், இரண்டாம் அடுக்கு மேம்பாலம் ஆவாரம்பாளையம் சாலை சந்திப்பினை கடந்து நீட்டிப்பு செய்து அமைக்க நெடுஞ்சாலைத்துறையை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 4846/2016/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 25 நாள் 24.06.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 26**

**பொருள்:** காந்திபுரம் உயர்மட்ட மேம்பாலம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – காந்திபுரம் சத்தி சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருதல் – 100 அடி சாலையில் 700மீ மற்றும் சின்னச்சாமி சாலையில் 1330மீ S.R.S.Travels வரை தற்காலிகமாக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்க மாநகராட்சியின் தீர்மானம் நிறைவேற்ற கோரியது – தொடர்பாக.

**பார்வை:**
1) கோட்டப்பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அவர்களின் கடிதம் க.எண்.973/2016.அ1, நாள்.16.06.2016.
2) மாண்புமிகு மேயர் அவர்களின் ஆய்வுக்குறிப்பு உத்தரவு

*******

பார்வை 1–ல் காண் கடிதத்தில், சத்தி சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலம் காந்திபுரம் முதல் அடுக்கு மேம்பாலம் கட்டும் முடிவுபெறும் நிலையில் உள்ளதாகவும், இரண்டாம் அடுக்கு பணி 100 அடி சாலை சின்னசாமி சாலையில் பணி நடைபெறவுள்ளதாக தெரிவித்து, 100 அடி சாலையில் 700மீ மற்றும் சின்னச்சாமி சாலையில் 1330மீ S.R.S.Travels வரை தற்காலிகமாக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்க மாநகராட்சியின் தீர்மானம் நிறைவேற்ற பார்வையில் காண் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் கோரியுள்ளதன்படி நெடுஞ்சாலைத் துறையின் மேம்பாலம் கட்டும் பணிக்காக, 100 அடி சாலையில் 700மீ நீளம் மற்றும் சின்னச்சாமி சாலையில் 1330மீ நீளம் S.R.S.Travels வரை உள்ள மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தற்காலிகமாக ஒப்படைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 4846/2016/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 26 நாள் 24.06.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

**பொருள்:** காந்திபுரம் உயர்மட்ட மேம்பாலம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – காந்திபுரம் சத்தி சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருதல் – 100அடி சாலை மற்றும் சின்னச்சாமி சாலையில் 110கி.வா உயர் அழுத்த மின்கம்பிகளை நிலத்தின் கீழ் புதைத்து மாற்றியமைக்கும் பணிக்காக மின்கோபுரம் அமைக்க சின்னசாமி சாலையில் S.R.S.Travels அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பிளாக் எண். J53 நகர சர்வே எண்.597 இடத்தினை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழஙக தீர்மானம் நிறைவேற்ற கோரியது – தொடர்பாக.

**பார்வை:**
1) கோட்டப்பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அவர்களின் கடிதம் க.எண்.973/2016.அ1, நாள்.16.06.2016.
2) மாண்புமிகு மேயர் அவர்களின் ஆய்வுக்குறிப்பு உத்தரவு

*******

பார்வை 1 ல் காண் கடிதத்தில், சத்தி சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலம் காந்திபுரம் முதல் அடுக்கு மேம்பாலம் கட்டும் முடிவுபெறும் நிலையில் உள்ளதாகவும், இரண்டாம் அடுக்கு பணிக்காக 100அடி சாலை மற்றும் சின்னச்சாமி சாலையில் 110கி.வா உயர் அழுத்த மின்கம்பிகளை நிலத்தின் கீழ் புதைத்து மாற்றியமைக்கும் பணிக்காக மின்கோபுரம் அமைக்க சின்னசாமி சாலையில் S.R.S.Travels அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பிளாக் எண். J53 நகர சர்வே எண்.597 இடத்தினை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்க தீர்மானம் நிறைவேற்றக் கோரப்பட்டுள்ளது.

மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான பிளாக் எண். J53 நகர சர்வே எண்.597ல் உள்ள இடமானது ஸ்ரீராம் அவின்யூ என்ற அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடமாக உள்ளது. மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடத்தினை எந்த பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அதைத் தவிர வேறு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யக் கூடாது என நகர் ஊரமைப்பு துறை உத்திரவிட்டுள்ளது. மேலும், பல சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புகளிலும் பொது ஒதுக்கீடு இடத்தினை வேறு எந்த பயன்பாட்டிற்கும் மாற்றும் செய்யக்கூடாது என உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடத்தினை நில பயன்பாடு மாற்றம் கோரி நகர் ஊரமைப்பு துறைக்கு பிரேரணை அனுப்பவும், நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் இடத்தினை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 4846/2016/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 27 நாள் 24.06.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 28**

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் சிப்பம்– IIல் நல்லாம்பாளையம் (CBE-KAY) பகுதியில் TRENCHLESS TECHNOLOGY முறையில் கி.மீ 3 / 200–300 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. 40,00,000/– க்கு (ரூபாய் நாறப்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த 11.02.2016 வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. முதல் ஒப்பந்த அழைப்பான 29.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டதில் ஒரு நிறுவனம் டேவணித் தொகை வழங்கததால் இரண்டு நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | நல்லாம்பாளையம் (CBE-KAY) பகுதியில் TRENCHLESS TECHNOLOGY முறையில் கி.மீ 3 / 200–300 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி | ரூ. 40,00,000 | திரு, K.P.செங்கோடன்சேலம் | ரூ. 4025000 | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 2,39 % அதிகம் |
| | | | தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை | **ரூ. 3912800** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.47 % குறைவு** |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு **0.47** % குறைவாக பெறப்பட்டுள்ள தி/எ. கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு **0.47** % குறைவாக பெறப்பட்டுள்ள தி/எ. கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். **1499 /2015/**ஜேஎன்4

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 28 நாள் 24.06.2016</u>

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் சிப்பம்– IIIல் இருகூர்-பீளமேடு, நெசவாளர் காலனி பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் கி.மீ **477/800-900** குறுக்கே Trenchless Technology முறையில் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் encasing குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. **72,00,000/–** க்கு (ரூபாய் ஏழுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த **22.12.2015** மாமன்ற தீர்மான எண் **278**ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இரண்டாம் ஒப்பந்த அழைப்பான **29.02.2016–**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஐந்து நிறுவனங்கள் கலந்து கொண்டதில் மூன்று நிறுவனம் டேவணித் தொகை வழங்கததால் இரண்டு நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | இருகூர்-பீளமேடு, நெசவாளர் காலனி பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் கி.மீ 477/800-900 குறுக்கே Trenchless Technology முறையில் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் encasing குழாய் பதிக்கும் பணி | ரூ. 72,00,000 | தி/எ. S.R.V அசோசியேட்ஸ் | ரூ. 7231000/- | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.45 % அதிகம் |
| | | | தி/எ. J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட்., கோவை | **ரூ. 7197305/-** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.02 % குறைவு** |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு **0.02** % குறைவாக பெறப்பட்டுள்ள தி/எ. J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு **0.02** % குறைவாக பெறப்பட்டுள்ள தி/எ. J.S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

ந.க. எண். **12149 /2015/**ஜேஎன்4

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 29 நாள் 24.06.2016</u>

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் சிப்பம்– IIIல் இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ **9/500-800** எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் **50** மீட்டர் நீளத்திற்கு 24mm thickness அளவுள்ள 800mm dia MS service pipe பதிக்கும் பணிக்கு ரூ. **28,77,055/–** க்கு (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து ஏழுபத்து ஏழாயிரத்து ஐம்பத்து ஐந்து மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த **04.12.2015**ல் பணிகுழுவின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இரண்டாம் ஒப்பந்த அழைப்பான **29.02.2016–**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஆறு நிறுவனங்கள் கலந்து கொண்டதில் நான்கு நிறுவனம் டேவணித் தொகை வழங்கததால் இரண்டு நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 9/500-800 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் 50 மீட்டர் நீளத்திற்கு 24mm thickness அளவுள்ள 800mm dia MS service pipe பதிக்கும் பணி | ரூ. 28,77,055/- | திரு. S.R.V அசோசியேட்ஸ் | ரூ. 2905000/- | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.97 % அதிகம் |
| | | | **திரு. J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட்., கோவை** | **ரூ. 2872580/-** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.16 % குறைவு** |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.16 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு. J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.16 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு. J.S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். 12150 /2015 / ஜேஎன்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 30 நாள் 24.06.2016**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் சிப்பம்– IIIல் இருகூர்-போத்தனூர் பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 477/800-900 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் (service pipe) குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. 47,17,000/– க்கு (ரூபாய் நாற்பத்து ஏழு இலட்சத்து, பதினேழாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த 04.12.2015ல் வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இரண்டாம் ஒப்பந்த அழைப்பான 29.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஐந்து நிறுவனங்கள் கலந்து கொண்டதில் மூன்று நிறுவனம் டேவணித் தொகை வழங்கததால் இரண்டு நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | இருகூர்-போத்தனூர் பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 477/800-900 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் (service pipe) குழாய் பதிக்கும் பணி | ரூ. 47,17,000/- | திரு. S.R.V அசோசியேட்ஸ் | ரூ. 4745000/- | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.60 % அதிகம் |
| | | | திரு. J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட்., கோவை | **ரூ. 4713800/-** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.06 % குறைவு** |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.06 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு. J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.06 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு/ள். J.S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

ந.க. எண். 12152 /2015 / ஜோன்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 31 நாள் 24.06.2016**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் சிப்பம்– IIIல் இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 7/400-500 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் (encasing pipe) பதிக்கும் பணிக்கு ரூ. 49,90,000/– க்கு (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து, தொண்ணூறாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த 04.12.2015ல் வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இரண்டாம் ஒப்பந்த அழைப்பான 29.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஐந்து நிறுவனங்கள் கலந்து கொண்டதில் மூன்று நிறுவனம் டேவணித் தொகை வழங்கததால் இரண்டு நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழஙகிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 7/400-500 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் (encasing pipe) பதிக்கும் பணி | ரூ. 49,90,000 | திரு/ள். S.R.V அசோசியேட்ஸ் | ரூ. 5017800/- | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.55 % அதிகம் |
| | | | திரு/ள். J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட்., கோவை | **ரூ. 4988759/-** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.03 % குறைவு** |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.03 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு/ள். J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.03 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு/ள். J.S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

ந.க. எண். 12153 /2015 / ஜோன்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 32 நாள் 24.06.2016**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் சிப்பம்– IIIல் இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 9/500-600 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. 49,86,000/– க்கு (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து, எண்பத்தாறாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கடந்த 04.12.2015ல் வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இரண்டாம் ஒப்பந்த அழைப்பான 29.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஐந்து நிறுவனங்கள் கலந்து கொண்டதில் மூன்று நிறுவனம் டேவணித் தொகை வழங்கததால் இரண்டு நிறுவனங்கள் வழஙகிய ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழஙகிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | இருகூர்-பீளமேடு பகுதியில் Trenchless Technology முறையில் கி.மீ 9/500-600 எண்ணிட்ட இரயில்வே கடவுகளின் குறுக்கே பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி | ரூ. 49,86,000 | திர்/ள். S.R.V அசோசியேட்ஸ் | ரூ. 5030600/- | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.90 % அதிகம் |
| | | | திர்/ள். J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட்., கோவை | **ரூ. 4983728/-** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.04 % குறைவு** |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.04 % குறைவாக பெறப்பட்டுள்ள திர்/ள். J,S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.04 % குறைவாக பெறப்பட்டுள்ள திர்/ள். J.S அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். 12151 /2015 / ஜேஎன்4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 33 நாள் 24.06.2016</u>**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தில் பில்லூர் அணை நீரேற்று கிணறு அமைந்துள்ள இடத்தில் பொருத்தப்பட்டுள்ள 6 எண்ணிக்கை மோட்டார்களை இயக்கும் பணியினை திர்/ள். கிளாசிக் இன்ஜினியர்ஸ், கோவை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். தற்பொழுது 6 எண்ணிக்கை மோட்டார்களில் இரண்டு மோட்டார்களில் ஆயில் மற்றும் நீர்கசிவு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது. இவ்விரு மின்மோட்டார்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து பொருத்தும் பணிக்கு ரூ. 22,00,000/– (ரூபாய் இருபத்திரெண்டு இலட்சம் மட்டும்) இரட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. பணிக்குழு தலைவரின் அனுமதி கடந்த 05.01.2016–ல் பெறப்பட்டது. முதல் ஒப்பந்த அழைப்பான 29.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய விபரம் பின்வருமாறு,

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழஙகிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் இரண்டாவது தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள இரண்டு மோட்டார்களில் | ரூ. 2200000/– | திரு. K.P.செங்கோடன் | ரூ. 2270000/– | ஒ ப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 3.18 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பட்டுள்ள நீர் கசிவுகள் மற்றும் ஆயில் கசிவுகளை பழுது நீக்கம் செய்து பொருத்தும் பணி | | திரு். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை | **ரூ. 2188000/–** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 0.55 % குறைவு** |

மேற்கண்ட பணிக்கு அவசர அவசியம் கருதி பெறப்பட்ட நிர்வாக அனுமதிக்கு முன்னேற்பு வழங்கியதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.55 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்கண்ட பணிக்கு அவசர அவசியம் கருதி பெறப்பட்ட நிர்வாக அனுமதிக்கு முன்னேற்பு வழங்கியதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 0.55 % குறைவாக பெறப்பட்டுள்ள திரு். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். 311 /2016/ஜேஎன்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 34 நாள் 24.06.2016**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

**பொருள் எண் 35**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் **01.04.2016** முதல் **31.03.2017** முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் – தொடர்பாக

---------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் **8** டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு மாநகராட்சி மன்ற தீர்மான எண்.**11** நாள்.**11.06.2014–**ன்படி நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.**15,406/–** (அனைத்து வரிகளும் சேர்த்து) என நிர்ணயம் செய்யப்பட்டு **01.04.2015** முதல் **31.03.3016** முடிய பணிபுரிய உத்திரவிடப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் **31.03.2016**உடன் முடிவடைகிறது. இதில் தற்போது **6** ஓட்டுநர்கள் மட்டுமே பிப்ரவரி **2015–**ம் மாதம் முதல் பணிபுரிந்து வருகிறார்கள்.

டெக்ஸ்கோ நிறுவனத்தினர் தங்களது கடித எண்.TEXCO/AMCBE/ 2015/801/Renewal,நாள். **3.03.2016–** ல் மேற்படி ஒப்பந்தத்தை **01.04.2016** முதல் **31.03.2017** முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து தருமாறும், அதில் ஓட்டுநர் ஒருவருக்கு **8** மணி நேர பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.**20,685/–** (சேவைக்கட்டணம் **12**% மற்றும் அதற்குரிய சேவைவரி **14.5**% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழஙகுமாறும்கேட்டுள்ளனர்.

எனவே,மேற்குறிப்பிட்ட மாதாந்திர ஊதியத்தில் **6** டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு **01.04.2016**முதல் **31.03.2017** முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தமுறையில் பணிபுரிய ஒப்பந்த நீடிப்பு செய்யவும், இதற்காகும் செலவினம் ரூ.**14,89,320/–**க்கு ஒப்புதல் வேண்டியும், மாமன்றத்திற்குப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.**2515/2016**/எம்.சி.**7**)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 36 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 36**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம்நெக்கார் நகரத்திற்கு இரு நகரஙகளுக்கிடையே உறவை மேம்படுத்துதல் நோக்கிலான ஆலோசனை தொடர்பான சிறப்புக் கூட்டத்திற்கு 28.06.16 முதல் 04.07.2016 வரை கலந்து கொள்ள அனுமதி வேண்டியும் – இரு நாடுகளுக்கிடையே சென்று வர ஏற்படும் செலவீன தொகையை மாநகராட்சி ஏற்கவும் அனுமதி வேண்டி –பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

பார்வை: 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு ( எம்.சி.2) துறை ஆணை எண் (எம்.எஸ்) எண் – 52 , நாள் – 29.02.2016.

2) எஸ்லிங்கன்ஆம் நெக்கார் நகரத்தின் மேயர் டாக்டர். ஜர்ஜான் ஜியாசர், நாள் – 24.05.2016.

*********

பார்வையில் 1ல் காணும் அரசாணையின் படி கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கார் நகரத்தின் இரு நகரஙகளுக்கிடையே உறவை மேம்படுத்துதல் நோக்கிலான ஆலோசனை தொடர்பான சிறப்புக் கூட்டத்திற்கு 28.06.16 முதல் 04.07.2016 வரை கலந்து கொண்டு சிறப்பு திட்டஙகள் குறித்து ஆலோசனைகளையும் இரு நகரஙகளையும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல எந்தெந்த துறைகளில் இணைந்து செயல்பட முடியும் என்பது குறித்து ஆய்ந்து முடிவு செய்யவும், நமது மாநகரத்தினுடைய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தினை தெரிவிக்கும் நோக்கிலும் இரு நகரஙகளுக்கிடையே பரஸ்பர பல்துறை வளர்ச்சிகள் ஏற்பட ஏதுவாகவும். மேலும் இரு நகரஙகளுக்கிடையே சுகாதாரம், கல்வி, கலாச்சாரம், சமூக சேவை மற்றும் உள்ளாட்சிப் பணிகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தஙகள் ஏற்படுத்தி செயல்படுத்தவும் மாண்புமிகு மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன்ஆம் நெக்கார் நகரத்திற்கு சென்று வர அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் எஸ்லிங்கன்ஆம் நெக்கார் நகரத்தின் மேயர் டாக்டர். ஜர்ஜான் ஜியாசர் அவர்களின் அழைப்பின் படி மாண்புமிகு மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் 28.06.16 முதல் 04.07.2016 வரை ஜெர்மனி நாட்டில் நடைபெற உள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்படும் இதர செலவீனத் தொகையை மேற்படி நிறுவனமே ஏற்றுக் கொள்ளும், மேலும் இருநாட்டிற்கு சென்று வரும் போக்குவாத்து செலவின தொகையை மட்டும் மாநகராட்சி மூலம் ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.9327/2014/எம்டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 36 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 37**

| | |
|---|---|
| **பொருள்:** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் – திருப்பூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக. |
| **பார்வை:** | 1. திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் அவர்களின் விண்ணப்பம் நாள் 11.06.2013.<br>2. கோயம்புத்தூர் மாநகர மன்ற தீர்மானம் எண். 67 நாள் 18.06.2013.<br>3. ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.சி1/4140/2013 நாள் 03.03.2014.<br>4. அரசு சார்புச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அவர்களின் கடித எண். 24464/ மா.ந.6/ 2015–1 நாள் 27.01.2010.<br>5. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 22.06.2016. |

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தில், திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் அவர்கள் தனக்கு 6 மாத கைக்குழந்தை உள்ளதாகவும் தனது சொந்த ஊரான அலகுமலை கிராமம், சேமலை கவுண்டம்பாளையத்திலிருந்து தினமும் 120 கிலோ மீட்டர் பயணம் செய்து பணிக்கு வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இவரது நீண்ட தூர பயண சிரமம், 6 மாத கைக்குழந்தையின் பாதுகாப்பினையும், தனது கணவர் மற்றும் வயதான மாமனார், மாமியார் ஆகியோரது நலத்தினையும் கருத்திற் கொண்டு தனக்கு திருப்பூர் மாநகராட்சிக்கு பணி மாறுதல் வழங்குமாறு கோரியிருந்தார்.

இப்பொருள் தொடர்பாக பார்வை 2ல் காணும் இம்மாநகர தீர்மானத்தின்படி, மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மன்றத் தீர்மானம் திருப்பூர் மாநகராட்சிக்கு அனுப்பி வைப்பட்டது. பார்வை 3ல் காணும் கடிதத்தின்படி, மேற்கண்ட தீர்மானம் மற்றும் திருப்பூர் மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பார்வை 4ல் காணும் அரசுக் கடிதத்தில், திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியர் அவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக திருப்பூர் மாநகராட்சிக்கு பணி மாறுதல் குறித்து கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சியின் மாமன்ற தீர்மானங்கள் 2013ல் நிறைவேற்றப்பட்டுள்ளதால், இரண்டு மாநகராட்சிகளிலும் புதிய தீர்மானங்கள் பெற்று அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, திருமதி. ஆர். ருக்மணி, நகர சுகாதார செவிலியரை திருப்பூர் மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு மீண்டும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், திருப்பூர் மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந.க.எண்.5452/2013/எம்சி3)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 37 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 38**

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பல வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணியின் கீழ் தரம் பிரிக்கப்பட்ட மறுசுழற்சிக்கான உலர் கழிவுகளான பேப்பர், ப்ளாஸ்டிக், கண்ணாடி, உலோகம், அட்டை பெட்டிகள் இன்னும் பல்வேறு வகையான உலர் கழிவுகளை அந்தந்த வார்டுகளில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு வீடு வீடாக சென்று சேகரம் செய்யப்படும் நடைமுறை மிகச் சிறப்பான வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் மறுசுழற்சிக்கான உலர் கழிவுகளை இம்மாநகர பகுதியில் அமைந்துள்ள பல்வேறு மறுசுழற்சி தொழிற்கூடங்களுக்கு சில அரசு சாரா அமைப்புகள் மூலம் நேரிடையாக விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயினை சம்பந்தப்பட்ட வார்டுகளில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கே சென்றடையும் வகையிலும் மேற்கூறிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திடக்கழிவுகளில் தரம் பிரிக்கப்பட்டு சேகரம் செய்யப்படும் மறுசுழற்சிக்கான உலர் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து எரிபொருள் எண்ணை/திரவ ஹைட்ரோகார்பன் எரிபொருள்/கச்சா எண்ணை தயாரிக்கும் திட்டம் பெங்களூரு மற்றும் கோவா நகரங்களில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. செயல் படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர வாரனாசி, கொன்கன் ரயில்வேக்குட்பட்ட இரத்தினகிரி, பான்வெல் மற்றும் உடுப்பி பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கூறிய திட்டத்தினை செயல் படுத்தப்படவுள்ளது தெரிய வருகிறது. இதே போல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் வார்டுகளில் தரம் பிரிக்கப்பட்டு சேகரம் செய்யப்படும் மறுசுழற்சிக்கான உலர் ப்ளாஸ்டிக் கழிவுகளை வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து எரிபொருள் எண்ணை/திரவ ஹைட்ரோகார்பன் எரிபொருள்/கச்சா எண்ணை தயாரிக்கும் ஆலையினை டர்ன்கீ முறையில் நிறுவி அதனை 5 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிக்கும் (Setting up of Plastic Wastes to Fuel Oil/Liquid Hydro Carbon Fuel Production Plant at Vellalore on Turn Key Basis including Operation & Maintenance for 5 Years) திட்டப்பணியினை செயல்படுத்தலாம்.

எனவே வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து எரிபொருள் எண்ணை/ திரவ ஹைட்ரோகார்பன் எரிபொருள்/கச்சா எண்ணை தயாரிக்கும் ஆலையினை டர்ன்கீ முறையில் நிறுவி அதனை 5 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிக்கும் (Setting up of Plastic Wastes to Fuel Oil/Liquid Hydro Carbon Fuel Production Plant at Vellalore on Turn Key Basis including Operation & Maintenance for 5 Years) திட்டப்பணியினை செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 4884/2016/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 38 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 39**

தற்சமயம் வெள்ளலூரில் தனியார் நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலையில் அதனை இயக்கி பராமரிக்கும் நிறுவனத்தாருக்கு ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குப்பைகளின் அளவினை விட கூடுதலாக சேகரம் செய்யப்படும் சுமார் குப்பைகள் முறையே மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையில் கழிவு செய்யப்பட்டும் மீதமுள்ள குப்பைகளை குப்பைக்கிடங்கிலுள்ள ஒரு காலியிடத்தினை தேர்வு செய்து அவ்விடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு கொட்டப்பட்டு வரும் குப்பைகளில் கொசு, ஈ தொல்லைகளை கட்டுப்படுத்துதல், குப்பைகளிலிருந்து வெளியேறும் துர்நாற்றத்தினை கட்டுப்படுத்துவதற்கு நுண்ணுயிர் நாசினி கலவை மற்றும் மூலிகை மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய பணிகளை மேற்கொள்வதற்கு தேவைப்படும் வஜ்ரா/வருன் போன்ற நீர் பீய்ச்சி வாகனங்கள் இம்மாநகராட்சி வசம் இல்லாததால் அவற்றினை தற்சமயம் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் அதிரடிப்படை முகாமிலிருந்து பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது. குப்பைகளில் ஏற்படும் தீயினை தண்ணீர் பீய்ச்சி அணைக்கும் பணிக்கு தேவைப்படும் நீர் பீய்ச்சி வாகனங்களை தமிழ்நாடு தீ அணைப்புத்துறை மற்றும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் அதிரடிப்படை முகாமிலிருந்தும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில சமயங்களில் மேற்படி நீர் பீய்ச்சி வாகனங்கள் குறித்த நேரத்தில் கிடைக்கப்பெறாத காரணத்தினால் மேற்கூறிய பணிகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் சுற்றுச்சூழல் மாசுபட்டு பொது மக்கள் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகின்றனர். மேற்கூறிய நீர் பீய்ச்சி வாகனம் இம்மாநகராட்சி வசம் இருக்கவேண்டியதின் அவசியத்தின் கருத்தில் கொண்டு வெள்ளலூர் குப்பைக்கிடங்கு பராமரிப்புக்கென பிரத்யேகமாக நவீன வகை நீர் பீய்ச்சி வாகனம் ஒன்று ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு 2016–17 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வெள்ளலூர் குப்பைக்கிடங்கிலுள்ள காலியிடத்தில் கொட்டப்பட்டு வரும் குப்பைகளின் மேல் நுண்ணுயிர் நாசினி கலவை மற்றும் மூலிகை மருந்து ஆகியவற்றினை தெளிக்கும் பணியினை மேற்கொள்வதற்கும் குப்பைகளில் ஏற்படும் தீயினை தண்ணீர் பீய்ச்சி அணைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தேவைப்படும் நவீன வகை நீர் பீய்ச்சி வாகனம் ஒன்று ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 906 / 2016 / எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 39 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 40**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைத் துறைகளின் அமைச்சர் அவர்கள் கடந்த 08-08-2015 அன்று வெள்ளலூர் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை கள ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கள ஆய்வின் போது தனியார் நிறுவனத்தினரால் நிறுவப்பெற்றுள்ள குப்பை மாற்று நிலையங்கள், வெள்ளலூர் பகுதியில் தனியார் நிறுவனத்தினரால் நிறுவப்பெற்றுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் சேனிடரி லேண்ட்ஃபில் கட்டமைப்பு ஆகியவற்றின் அன்றாட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மாநகராட்சி பிரதான அலுவலகத்திலிருந்து கண்காணிப்பதற்கும் வெளியாட்கள் வளாகங்களுக்குள் அத்துமீறி நுழைவதனை கண்காணிப்பதற்கும் மேற்கூறிய குப்பை மாற்று நிலையங்கள், இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் சேனிடரி லேண்ட்ஃபில் கட்டமைப்பு ஆகியவற்றில் கண்காணிப்பு கேமராக்களை (CCTV CAMERAS) பொருத்த நடவடிக்கை எடுக்க கோவை மநகராட்சி நிர்வாகத்திற்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உத்திரவிற்கிணங்க தனியார் நிறுவனத்தினரால் நிறுவப்பெற்றுள்ள குப்பை மாற்று நிலையங்கள், வெள்ளலூர் பகுதியில் தனியார் நிறுவனத்தினரால் நிறுவப்பெற்றுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் சேனிடரி லேண்ட்ஃபில் கட்டமைப்பு ஆகியவற்றின் அன்றாட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மாநகராட்சி பிரதான அலுவலகத்திலிருந்து கண்காணிப்பதற்கும் வெளியாட்கள் வளாகங்களுக்குள் அத்துமீறி நுழைவதனை கண்காணிப்பதற்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.53.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.1151 / 2016 / எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 40 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 41**

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் 285 நாள் 12-11-2014 ன் படி வெள்ளலூர் குப்பைக் கிடங்கு வளாகத்தில் கடந்த 17-01-2006 ல் தி/ள் ராம்கி எனர்ஜி அன்டு என்விரான்மென்ட் லிமிடெட், ஹைதராபாத் எனும் தனியார் நிறுவனத்தாரால் நிறுவி இயக்கி பராமரிக்கப்பட்டு வந்த மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையினை அந்நிறுவனத்தாரால் மேலும் இயக்கி பராமரிக்க இயலாத காரணத்தினை கருத்தில் கொண்டு மேற்டி நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்பாட்டினை பரஸ்பரமாக முடித்துக்கொள்ள முடிவு செய்யவும் மேற்படி மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையினை புனரமைப்பு செய்து அதன் பின் அதனை வேறுவொரு தனியார் நிறுவனத்தின் மூலம் இயக்கி பராமரிக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்கூறிய வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையினை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையினை இயக்கி பராமரித்தல் (Operation & Maintenance of the existing Vermi-compost Plant at Vellalore) பணிக்கு கடந்த 17-02-2016 ல் இரண்டு உறை (Two Cover System) முறையில் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டன.

1) தி/ள் என்.எம்.எஸ். இன்ஞினியர்ஸ், கோயம்புத்தூர்
2) தி/ள் எஸ்.பி.பில்டர்ஸ், கோயம்புத்தூர்
3) தி/ள் கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா, சென்னை
4) தி/ள் வர்தான் இன்.ஃப்ராஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர்

மேலே படிக்கப்பட்ட நான்கு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 25-02-2016 அன்று கூடி திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண். 1 மற்றும் 2 ல் குறிக்கப்பட்டுள்ள இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிகள் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை. வரிசை எண். 3 மற்றும் 4 ல் குறிக்கப்பட்டுள்ள இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிகள் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்தமைக்கு 25-02-2016 அன்று ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகள் 26-02-2016 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

| வ. எ | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரரின் விலை (டன் ஒன்றிற்கு) ரூபாயில் |
|---|---|---|
| 1. | திரு/ள் கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா, சென்னை | 800.00 |
| 2. | திரு/ள் வர்தான் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர் | 770.00 |

மேலே படிக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு/ள் வர்தான் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர் நிறுவனத்தினர் டன் ஒன்றிற்கு ரூ.770.00 வீதம் கொடுத்திருந்தனர். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 29-02-2016 அன்று கூடி விவாதித்து மேற்படி நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தததனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் அவர்களது 01-03-2016 தேதியிட்ட கடிதத்தில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை டன் ஒன்றிற்கு ரூ.770.00 லிருந்து டன் ஒன்றிற்கு ரூ.750.00 என விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 03-03-2016 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் திரு/ள் வர்தான் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர் நிறுவனத்தார் டன் ஒன்றிற்கு ரூ.750.00 க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் இம்மாநகராட்சியால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையினை மூன்றாண்டுகள் இயக்கி பராமரித்தல் (Operation & Maintenance of the existing Vermi-compost Plant at Vellalore) பணியினை திரு/ள் வர்தான் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர் நிறுவனத்தார் டன் ஒன்றிற்கு ரூ.750.00 க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5208/2015/ எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 41 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 42**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. எனவே, இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| **1** | வார்டு எண் 87 க்குட்பட்ட மகாராஜா காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | **74.80** | **04.03.16** முதல் அழைப்பு | **1).** திரு/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா **5.10**% அதிகம்<br>**2).**திரு/ள்.எஸ்.பி. பில்டர்ஸ் **6.33** % அதிகம் | திரு/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இந்தியா **4.99**% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 204 /2016/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 42 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 43**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 47க்குட்பட்ட மீனாட்சி நகர் மற்றும் PNT காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல். | 73.00 | 22.02.16 முதலாம் அழைப்பு | 1). திரு. ஆர்.மயில்வாணன் 0.03% குறைவு<br>2). திரு.ஏ. அம்மாசையப்பன் 1.06 % அதிகம் | திரு. ஆர். மயில்வாணன் 0.03% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளில் அவசர அவசியம் கருதி மாண்புமிகுமேயர் அவர்கள் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி வழுங்கியதற்கு பின்னேற்பும் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம். ந.க.எண்.12134/2015/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 44**

| | |
|---|---|
| பொருள் :- | கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப் பிரிவு - மாநகராட்சி அனைத்து நகர் நல மையங்களிலும் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரியும் காவலர்கள் , ஆயாக்கள் - துப்புரவு பணியாளர்கள் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு செய்தல் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |

********

கோயம்புத்தூர் மாநகரட்சி மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்குட்பட்ட 8 மாநகராட்சி நகர் நல மையங்களுக்கும் மற்றும் மத்தியம் மற்றும் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 12 மாநகராட்சி நகர் நல மையங்களில் பணிபுரிய காவலர்கள் , ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.41.90 லட்சம் மற்றும் ரூ.46.00 இலட்சத்திற்கும் ஒப்பந்த புள்ளி கோரிய தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ், கோவை நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மான எண். 194 நாள். 27.07.2015 - ன் படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் இயங்கும் (8 +12) 20 நகர் நல மையங்களுக்கு காவலர்கள், ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ், கோவை நிறுவனத்தார் மூலம் நடைபெற்று வரும் பணி காலம் 27.07.2016 உடன் முடிவடைகிறது. எனவே, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யவும், புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கனவே மேற்படி பணிகளை மேற்கொண்டு வரும் தி/ள். சானிட்ஸ் டெக்னாலஜிஸ், கோவை ஒப்பந்ததாரரையே ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி காலநீட்டிப்பு செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்.1478/2015/ எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 45

**பொருள்**:- பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பிரதான அலுவலகம் – திரு.ந. வீரக்குமார், உதவியாளர், பொதுப்பிரிவு – தனது பெயரிலுள்ள இடத்தில் இந்தியன் வங்கி, சி.எம்.சி கிளையில் ரூ.10.00 இலட்சம் வீடு கட்டுவதற்காக கடனாக பெற்ற தொகையில் தற்போது நிலுவையிலுள்ள ரூ.8,63,000/—ஐ மாநகராட்சி வீடுகட்டும் முன்பணத் தொகை கோருதல் – தொடர்பாக.

**பார்வை:-** ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள். 23 .06.2016.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, பிரதான அலுவலகம், பொதுப்பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ந. வீரக்குமார் அவர்கள் தனது பெயரில் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண்.68, இராமநாதபுரம், 23, பாப்பம்மாள் லேஅவுட்டில் இந்தியன் வங்கி, சி.எம்.சி கிளையில் ரூ.10.00 இலட்சம் வீடு கட்டுவதற்காக கடனாக பெற்றதில் தற்போது நிலுவையிலுள்ள ரூ.8,63,000/—ஐ மாநகராட்சி வீடுகட்டும் முன்பணத் திட்டத்தின் கீழ் முன்பண விதிமுறைகளுக்குட்பட்டு அலுவலகம் மூலம் வழங்கப்படும் முன்பணம் வாயிலாக இந்தியன் வங்கியில் பெற்ற கடனை அடைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் அன்னாரது பெயரில் இந்தியன் வங்கி, சி.எம்.சி. கிளையில் நிலுவையிலுள்ள ரூ.8,63,000/— கடன் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வீடு கட்டும் முன்பணமாக ரூ.8,63,000/— ஐ மாநகராட்சி விதிகளின்படியும், அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டும் ஒரே தவணையில் அன்னாருக்கு வழங்கவும் மேற்படி அசல் தொகையை 100 மாத சம தவணைகளிலும், பின்னர் வட்டி தொகையை 30 மாத சம தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.3627/2016/எம்சி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46

**பொருள்**:- பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பிரதான அலுவலகம் – திரு.வே. இராமச்சந்திரன், உதவியாளர், குடிநீர் விநியோகப்பிரிவு – அவரது பெயரில் காலி மனையிடம் வாங்கி வீடு கட்டி கொள்ள முன்பணம் அனுமதித்தல் – தொடர்பாக.

**பார்வை:-** ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள். 23 .06.2016.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, பிரதான அலுவலகம், குடிநீர் விநியோகப்பிரிவில் உதவியாளராக பணிபுரியும் திரு. வே. இராமச்சந்திரன் அவர்கள் கோவை தாலுக்கா, வெள்ளலூர் கிராமம், பட்டா எண்.210ல் உள்ள கச. 49/2 சி நெ.காலையில் வெள்ளலூர் பஞ்சாயத்து செயல் அலுவலர் அவர்களால் 25.03.2015ம் தேதியில் செலுத்து சீட்டு எண்.01813ன்படி அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்பட்டு முறைபடுத்தப்பட்டுள்ள ஸ்ரீகார்டன் பேஸ் II எனப் பெயரிடப்பட்டுள்ள லே அவுட்டில் 1364 சதுரடி (3 சென்ட் 057 சதுரடி) கொண்ட காலிமனையிட எண்.2 யினை அவரது பெயரில் வாங்கி அதில் வீடு கட்டி கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.29,41,968/—ல் ரூ.15,23,813/—ற்கு அலுவலகம் மூலம் வழங்கப்படும் முன்பணம் வாயிலாக கிரயம் செய்து வீடு கட்டி கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காலிமனையிடம் வாங்கி வீடு கட்டி கிரயம் செய்ய மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வீடு கட்டும் முன்பணமாக ரூ.15,24,000/—ஐ மாநகராட்சி விதிகளின் படியும், அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டும் 3 தவணையில் அவருக்கு வழங்கவும் மேற்படி அசல் தொகையை 144 மாத தவணைகளிலும், பின்னர் வட்டி தொகையை 36 மாத சம தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.3155/2016/எம்சி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 47**

| பொருள் | கோயம்புத்தூா் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திரு. ம. மணிகண்டன், தேர்ச்சி திறனற்ற பணியாளா் - புதிய வீடு வங்கி கடன் பெற்று கட்டியது – வீடு வாங்குவதற்காக வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன்தொகையை அடைப்பதற்கு மாநகராட்சி வீடு கட்டும் முன்பணம் நிதியில் இருந்து கடன் பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
|---|---|

--------------

கோயம்புத்தூா் மாநகராட்சியில் பணிபுரியும் திரு. ம. மணிகண்டன், தேர்ச்சி திறனற்ற பணியாளா், மேற்கு மண்டலம் அவா்கள், கோயம்புத்தூா் ரிடிடு கிணத்துக்கடவு ரீசப்டி, கோவை தெற்கு வட்டம் செட்டிபாளையம் கிராமம் புலத்தில் 585 நெ. பட்டா, க.ச.776/4 நெ. நெ.ஹெக் 0.38.5க்கு பு.ஏ. 0.95 க.ச. 779/5 நெ.பு. ஹெக் 0.20.0 க்கு பு.ஏ.0.49, க.ச. 773/4 நெ.பு. ஹெக் 0.27.0 க்கு ,ப.ஏ.0.67 ஆக ஒட்டு பு.ஹெக் 0.85க்கு பு.ஏ.211 விஸ்தீரணமுள்ள பூமிகளை பிரித்து மனையிடப் பிரிவிற்கு சங்கமம் நகா் என பெயரிட்ட மனைப்பிரிவில் மனை எண் 34 க்கு 1485 சதுரடிகள் அல்லது 3 செண்டும் 178 சதுரடிகள் கொண்ட மனையில் 806 சதுரடி கொண்ட வீட்டினை Canfin Home நிதி நிறுவனத்தில் ரூ. 10.இலட்சம் கடனாக பெற்று வாங்கியுள்ளாா். நிதிநிறுவனத்தில் நிலுவையிலுள்ள கடனை அடைப்பதற்கு, மாநகராட்சி வீடுகட்டும் முன்பணம் நிதியில் இருந்து கடன் தொகை ரூ. 9,76,679/- வழங்குமாறு விண்ணப்பித்துள்ளதின்பேரில், வீடு வாங்கியதற்கும், மாநகராட்சி வீடுகட்டும் முன்பணம் நிதியிலிருந்து (HBA) கடன்தொகை ரூ.9,76,679-ஐ பெற்றுக்கொள்வதற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 171 நாள் 26.11.2014ன்படியும், மாநகராட்சி விதிகளின்படியும், அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு மாநகராட்சி வீடுகட்டும் முன்பணம் நிதியிலிருந்து (HBA) கடன் தொகை ரூ. 9,76,679/- ஐ ஒரே தவணையில் அவருக்கு வழங்கவும், அத்தொகையினை 120 மாத சம தவணையிலும், பின்னா் வட்டித் தொகையினை 30 மாத சம தவணைகளிலும் அவரது சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 8287/2015/சி. 3 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 47 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 48**

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் மாதந்திர வணிகவளாகங்கள் 2015-18-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.07.2015-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடா்பாக.

பாா்வை :
1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 29.07.2015
2. வரிவிதிப்பு மற்றும் தீா்மான எண். 398 நாள். 29.02.2016

*******

கோயம்புத்தூா் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2015-18 மாதந்திர வணிகவளாகங்கள் இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 29.07.2015-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயா்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

1.மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மாா்கெட் வணிகவளாகம் கடை எண். 9

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிா்ணயத் தொகை தொகை ரூ | ஏலதாரா் பெயா் | 3-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மாா்கெட் வணிகவளாகம் கடை எண். 9 | 63,100 | M.செல்வம் & பாா்ட்னா் A.ஆரோக்கியம் | -<br>-<br>- | 63,999<br>47,200 | 63,999 |

2.மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடை எண். 3 ( 80 ச.அடி)

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 14-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடை எண். 3 | 3,275 | A.ராணி | - | 3,550 | 3,550 |

3.மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடை எண். 4 ( 80 ச.அடி)

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 14-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடை எண். 4 | 3,275 | G.லட்சுமி | - | 3,550 | 3,550 |

4.திருவேங்கடசாமி ரோடு கடை எண்.30 ( முதல் தளம் 210 சதுரடி )

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 14-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | திருவேங்கடசாமி ரோடு கடை எண்.30 | 13,000 | M.ரமேஷ் | - | 13,560 | 13,560 |

வரிசை எண்.1-ல் கண்ட மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மார்கெட் வணிகவளாகம் கடை எண். 9 இனத்திற்கு 17.02.2016-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.63,100/-ஐ விட கூடுதலாக ரூ.63,999/-க்கு M.செல்வம் & பார்ட்னர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

வரிசை எண் .2-ல் கண்ட மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடை எண். 3 ( 80 ச.அடி) இனத்திற்கு 17.02.2016-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.3,275/-ஐ விட கூடுதலாக ரூ.3,550/-க்கு A.ராணி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

வரிசை எண்.3-ல் கண்ட மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடை எண். 4 ( 80 ச.அடி) இனத்திற்கு 17.02.2016-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.3,275/-ஐ விட கூடுதலாக ரூ.3,550/-க்கு G.லட்சுமி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.
வரிசை எண்.4-ல் கண்ட திருவேங்கடசாமி ரோடு கடை எண்.30 ( முதல் தளம் 210 சதுரடி ) இனத்திற்கு 17.02.2016-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.13,000/-ஐ விட கூடுதலாக ரூ.13,560/-க்கு M.ரமேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

மேற்படி அனைத்து கடைகளுக்கும் அரசுமதிப்பை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய மேற்படி கடைகளை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதியிக்குழுவிற்கு பொருள் வைத்ததில் அக்குழு தனது தீர்மான எண். 398 நாள். 29.02.2016 –ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் உத்தரவு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 9286/2014/A1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 48 நாள் 24.06.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 49**

பொருள்: நிலம் – நீண்ட கால குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் வடக்கு வட்டம் – சின்னவேடம்பட்டி கிராமம் – க.ச.எண்.268/1 – மரபணு பரிசோதனை ஆலோசனை பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் – நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலம் வழங்க முன்மொழிவுகள் – தொடர்பாக.

பார்வை: வட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் கடிதம் ந.க.எண்.1862/2016.அ5, நாள்.02.02.2016.

*******

பார்வையில் காண் கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சின்னவேடம்பட்டி கிராமம் கிராமத்தில் க.ச.எண்.268/1ல் மந்தை புறம்போக்கில் 0.50 ஏக்கர் விஸ்திரணமுள்ளள இடத்தினை மரபணு பரிசோதனை ஆலோசனை பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலம் வழங்க முன்மொழிவுகள் அனுப்ப மாநகராட்சி மாமன்ற தீர்மானத்தினை வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி, கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சின்னவேடம்பட்டி கிராமம் க.ச.எண்.268/1ல் உள்ள 0.50 ஏக்கர் இடமானது நகரளவு ஆவணஙகளின்படி மந்தை புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் அரசு நிலமாக வருவாய் துறைக்கு சொந்தமானதாக உள்ளது. எனவே, இந்த இடத்தினை மரபணு பரிசோதனை ஆலோசனை பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலம் வழங்க முன்மொழிவுகள் அனுப்ப மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.4835/2016/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 24.06.2016</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 50**

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண். 70க்குட்பட்ட அம்மன்குளம் பகுதியில் ஜவஹர்லால் நேரு நகர்புற புணரமைப்பு திட்டத்தின் கீழ் வாலாங்குளத்தில் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்காக 792 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ளது. புதியதாக கட்டப்பட்டுள்ள இக்குடியிருப்பில் தெருவிளக்குகள், தண்ணீர் குழாய்கள், சாலைகள், மழைநீர் வடிகால்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இக்குடியிருப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கீழ்கண்ட அடிப்படை வசதிகளை மாநகராட்சியின் வசம் ஒப்படைப்பு செய்ய வேண்டி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து கடிதம் மற்றும் வரைபடங்கள் பெறப்பட்டுள்ளது.

**<u>அடிப்படை வசதிகளின் விபரம்</u>**

| வ.எண். | அடிப்படை வசதியின் விபரம் | அளவுகள் | அலகு |
|---|---|---|---|
| 1 | கற்சாலை மற்றும் தார் சாலை | 3314 | ச.மீ |
| 2 | கான்கிரீட் பிணைப்பு கற்கள் பதித்தல் | 3526 | ச.மீ |
| 3 | ஆர்.சி.சி. மழைநீர் வடிகால், வடபுறம், தென்புறம் மற்றும் மேற்கு எல்லை | 584 | மீ |
| 4 | ஆர்.சி.சி. மதகு கிழக்கு குளக்கரை | 1 | எண் |
| 5 | செங்கற்களாலான மழைநீர் வடிகால் | 1444 | மீ |
| 6 | ஆர்.சி.சி. சிறுபாலங்கள் | 5 | எண் |
| 7 | ஆர்.சி.சி. செவ்வக வடிவ தண்ணீர் தொட்டி (10.00 மீ x 2.25 மீ x 4.60 மீ) 1,00,000 லிட்டர் கொள்ளளவு | 3 | எண் |
| 8 | 150 மிமீ விட்டமுள்ள ஆழ்குழாய் கிணறுகள் | 6 | எண் |
| 9 | 3 HP முத்தறுவாய் நீர்மூழ்கி மோட்டார் பம்பு செட் | 6 | எண் |
| 10 | 5 HP முத்தறுவாய் மோனோ பிளாக் மோட்டார் பம்பு செட் | 2 | எண் |

| | | | |
|---|---|---|---|
| 11 | 3 HP முத்தறுவாய் மோனோ பிளாக் மோட்டார் பம்பு செட் | 4 | எண் |
| 12 | 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகள் | 396 | எண் |
| 13 | 32 மிமீ PVC பைப் 10Kg/Cm2 (ஆழ்குழாய் கிண்ற்றிலிருந்து தொட்டிக்கு விநியோகம் செய்ய) | 276 | மீ |
| 14 | 50 மிமீ PVC பைப் 10Kg/Cm2 (தொட்டியிலிருந்து குடியிருப்பு பகுதிக்கு விநியகோம் செய்ய) | 851 | மீ |
| 15 | 40 மிமீ PVC பைப் 10Kg/Cm2 (குடியிருப்பு பகுதியில் கீழ் தொட்டியிலிருந்து மாடியிலுள்ள சின்டெக்ஸ் தொட்டிக்கு விநியோகம் செய்ய) | 972 | மீ |
| 16 | கழிவு நீர் சுத்திகரிப்பு தொட்டி (17.20 மீ x 3.80 மீ x 5.00 மீ) | 3 | எண் |
| 17 | ஆர்.சி.சி. பாதாள சாக்கடை தொட்டி | 89 | எண் |
| 18 | 160 மிமீ UPVC பைப் (குடியிருப்பு பகுதியிலிருந்து கழிவுநீர் தொட்டி வரை கழிவுநீர் வெளியேற்றுவதற்கு) | 1321 | மீ |
| 19 | சிறுவர் விளையாட்டு திடல் (சறுக்கு – 1, 4 இருக்கை ஊஞ்சல் - 1, Seasaw – 1, பூங்கா இருக்கைகள் - 1, இரும்பு கேட் - 2) | 1 | எண் |
| 20 | 28 வாட்ஸ் மின் திறன் கொண்ட தெருவிளக்குகள் மற்றும் தெருவிளக்கு கம்பங்கள் | 25 | எண் |
| 21 | மின் இணைப்புகள் - 3, தெருவிளக்குகள் - 1 | 4 | எண் |
| 22 | நீர் அளவை மானி | 1 | எண் |

மேற்கண்ட அடிப்படை வசதிகளை தொடர்ந்து பராமரிப்பதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவும், மேற்கண்ட அடிப்படை வசதிகளை மாநகராட்சி சொத்து பதிவேட்டில் பதிவு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 8938/15/MD5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 50 நாள் 24.06.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**